KALANILAYAM

தனிப்பிரதி விலை அணா 0-2-6

# கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

உள் நாடு—வருஷ சந்தா ரூ. 7 0 0

புற நாடு—வருஷ சந்தா ரூ. 9 0 0

கலாநிலயம் :—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol. 8] 1935 ௵ ஜனவரி ௴ 24 ௳ [No. 4

## பொருளடக்கம்.


| | | |
|---|---|---|
| 1. | தலையங்கம் (Leader) | 49 |
| 2. | சூளாமணி (இரதநூபுரச் சருக்கம்) வித்துவான் T. P. மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை M.A., B.L. | 51 |
| 3. | ஒத்தெல்லோ (அங்கம் 1. களம் 2.) Shakespeare's—"Othello" | 53 |
| 4. | அணியிலக்கணம் (பாவிக அணி) | 54 |
| 5. | சூரியன் -(கதிரவன் ஒளி - தன்மையும் பயனும்) E. T. இராஜேஸ்வரி அம்மாள் M.A., L.T. | 56 |
| 6. | வில்லிபாரதம் (துரியோதனன்) K. T. விஜயராகவாச்சாரியார் B. A. | 58 |
| 7. | கம்பராமாயணம் (கார்காலப் படலம்) T. N. சேஷாசலம் B.A., B.L. | 61 |
| 8. | வர்த்தமானம் | 64 |


## கலாநிலயம்

### கடவுட் சித்தம்.

**வா**ழ்வாங்கு வாழும்வகைஇவ்வுலகில்ஒன்றேதான் இருக்கின்றது; மற்றவெலாம் மரணவேதனையே யன்றி வேறன்று. இதனை எத்தனைமுறை திருப்பித் திருப்பிச்சொன்னாலுந் தகும். இப்பொழுது தென்படுகின்றபற்பல மானுடநடமாட்டங்களில் ஒன்றேனும் வாழ்வாங்குவாழ்கின்ற அவ்வொரு தனிவகையினை உட்கொண்டதாகாது. மற்று, மானுடநன்மை கைவரவேண்டுமாயின் இன்றியமையாச்சிறப்புடைய அவ்வொருவகை வாழ்க்கையே அமைதல்வேண்டும். அவ்வகை யாதென்பதைக் கடவுள் அறிவார், அது நடைபெறவேண்டு மென்பதும் அவர் சித்தம்; அதனைக் கண்டுகொண்டு இவ்வுலகில் நிறுவுவது மனிதர் கடன்.

கடவுள் சித்தத்தை எவ்வாறு அறிவோம் யாம் என்று உள்ளங்கசிந்து உருகுவார் உத்தமர்; மற்று, மனந்தீய்ந்து கையறவுகொள்ளமாட்டார். இத்திறத்தில் கடவுளின் சித்தம் யாதெனத் தேர்ந்துகொள்ள இறுதியில் இயலினுமியலாவிடினும், ஒருவிடயத்தை உணர்ந்து நம் சிந்தனையில் வைத்துக்கொள்வது அம்முயற்சிக்கு அதிகமும் உபகாரமாயிருக்கும். கடவுளின்சித்தம் இதுவேயோ வென்றவொரு தோற்றம் உதிக்கும்போது, நமது மதிப்பிற்குநேர் மாறான சில நிகழ்ச்சிகளைக் கண்ணுற்றவளவில், அந்தத் தோற்றமானது கலைந்துவிடுகின்றது. இப்படி யிடையிடையே நம் மனம் இமைத்துவிடுவதால், எண்ணியஎண்ணத்தின் உதவியைப்பெற்று நாம் தொடரமாட்டாதவர்களாகமுடிகின்றோம். இவ்விடையூறு நேராமற்காப்பதற்கு முதலில், கடவுளின் கருமங்களில் நம்பிக்கை வைக்கவேண்டுமென்பது மிக்க அவசியமாகின்றது. மனிதன் தன்னுடைய காரியங்களைக் கடவுளுடைய காரியங்கள் என்றுகருதி மயங்குகின்றான். "நீ நினைக்கின்றஒன்று கைகூடவேண்டும், அல்லது கைகூடல் ஆகாது என்பது கடவுளின் சித்தமாகலாம். முடிவு தெரிகின்றவரையில் நீ காத்துத்தான் இருக்கவேண்டுமென்று கூறுகின்றார்; ஆயினும் அதற்கிடையில் நீ கவலைப்பட்டு மனந் தடுமாறவேண்டுமென்று அவர் ஒருபோதுங் கூறவில்லை. உன்னைக் காக்கவைப்பது அவர் சித்தமே; மற்று, நீ கவலைப்படுவதோ அவருடைய காரியம் அன்று. இது உன்னுடைய காரியமே; ஆயினும், கடவுளே, 'நான் ஏன் இப்படிக் கவலைப்படும்படி செய்கின்றாய்' என்றென்று எத்தனைமுறை நொந்திருக்கிறாய் நீ. நீ இவ்வண்ணம்கவலைப்படுவது கடவுளின் காரியமென்று உனக்கு எப்படித் தெரிந்தது?" என்று ஒவ்வொருவனும் சற்றேசிந்தனையைச் செலுத்தித் தன்னையே கேட்டுக்கொள்ளுவானாயின், தன்முன்னே தானே ஓர் ஊமையனாய் நிற்கவேண்டிய உண்மை புலப்படும்.

இன்னணம், தம் காரியத்தைக் கடவுள் காரியமாகக்கருதி மயங்குவதால், அவர் சித்தத்தைக் கண்டுகொள்ளற்குரிய தெளிவினை இழந்துவிடுகின்றார் ஒருபுறம். மறுபுறம், அவருடையகருமங்களைத் தம் சித்தத்தால் மதிக்கப்புகுவதாலும் அத்தெளிவினை மாந்

தர் இழந்துவிடுகின்றார். கடவுள் தான் செய்யுங் காரியம் ஒவ்வொன்றிற்கும் இது இது காரணமென்று நம்மிடத்திற் சொல்லவேண்டுமென்று நாம் எதிர்பார்ப்பதுஅழகன்று. மற்று, நாம் மதிக்கின்றபடியே அக்காரணங்கள் இருத்தல்வேண்டும்என்று எண்ணுவதும் நியதியாகாது. காரணந் தென்படாமையினால் கடவுளே இல்லையென்று விளம்புவது தன்னெஞ்சு அறிந்ததோர் பொய்யேயாம். நம்முடைய கரணங்களன்றிக் காரணங்களுங் கடந்து நிற்பவரே கடவுள். இதனை ஒவ்வாதாரும் இல்லை; ஒவ்வியும் ஐயத்தால் உழலாதாரும் இல்லை. இந்த விபரிதத்தை நாம் ஏன் இழைத்துக்கொள்ளவேண்டும்!

பல வருடங்களுக்கு முன் யாம் படித்த ஒரு சிறுகதை இப்பொழுது நினைவிற்கு வருகின்றது.

ஒருவன் ஒரு துறவியையடுத்துத் தன்னைச்சீடனாக ஏற்றுக்கொள்ளும்படி மிகவேண்டினான். "எனக்குச் சீடனாயமைதல் மிக அருமை; என் செய்கைகளைக் கண்டு நீ பொறுக்கமாட்டாய்"என்று அந்தத் துறவி நேரமறுத்தனர். ஆயினும், அவன் விட்டிலன்; அவருடன் சென்றான். முதல்நாள் இரவு இவ்விருவரும் ஒரு கிராமத்தையடைந்தனர். அங்கு விருந்தும்விழவுமாயிருந்த வொருவீடு தென்பட்டது. அதன்கண் சென்றனர். அவ்வீட்டிற்குடையான் இவர்களை வரவேற்று உபசரித்தனன். இவர்களும் விருந்து உண்டு அவ்விரவை அம்மனையின்கண் இனிது கழித்தனர். மறுநாட்காலையில், துறவி, விடைகொண்டகலுமுன் அம்மனையின் கிழவனை வாழ்த்தினர்; அவனும் தக்க முகமன்கூறி வழியனுப்பினான். சிறிது தூரம் சென்றதும், துறவி, தன் அங்கியில் மறைத்திருந்த ஒரு தங்கக் கிண்ணத்தை எடுத்துச் சீடன் கையில் தந்து "நாம் நேற்றிரவு தங்கிய மனையினின்று இதனைத் திருடிக்கொணர்ந்துள்ளேன்; நான் கேட்கும் வரை நீ வைத்திரு" என்றனர். சீடனோ சாலத்திகைத்தான். "நமக்கு அத்தனை அன்புடனே விருந்துசெய்தவர் மனையிற் களவுபுரியலாமா; துறவியாயிருந்தும் ஏன் இது செய்தீர்" என்று வருந்திக்கேட்ட அச்சீடனை நோக்கி, "மைந்தா, சற்றேசும்மாவிரு: நான் கடவுள் செய்வதுபோல் செய்தேன்" என்றனர் துறவி. "நல்ல கடவுள்!" என்று நெட்டுயிர்ப்பு விட்டான் சீடன். "நல்ல நல்ல மிக நல்ல கடவுளே" என்று துறவியும் இனிது கூற இருவரும் வழிநடந்தனர்.

நடந்துசென்றவர் அன்றிரவுவேறோர்கிராமத்தைச் சேர்ந்தனர். அவ்வூரிலுள்ள செல்வவந்தனைத் தேடிச் சென்று, உணவும் துயிலற் கிடமுங் கேட்க, அவன், "சோம்பேறிகளே, உங்களுக் கொன்றுங்கொடேன்" என வாய்வந்தவாறுவைதனன். ஆயினும் துறவியோ அகலாமல் மேலும் மேலும் வேண்டவே, அவன், "உங்கள் வயிற்றை நிறப்புவதற்கு அன்று நான் பொருள் ஈட்டுவது; ஆகையால் உண்பதற்கோ ஒன்றுங் கொடேன். வேண்டுமெனின் அவ்வைக்கோல் போரில் படுத்துஉறங்கிப் பொழுது புலர்ந்ததும் போய்ச் சேருங்கள்" என்றான். துறவியுஞ் சீடனும் வெறும் வயிற்றினராய் வைக்கோற்பள்ளியில் இரவைக்கழித்தனர். காலையில் துறவி, அச் செல்வவந்தனைக்கண்டு, "நீர் எமக்குச்செய்த உதவியை ஒருபோதும் மறக்கமாட்டோம். அவ்வைக்கோற்போருங் கிடைக்காவிடில் எங்கள்கதி என்னாவது" என்றுபாராட்டி வினயமுடன் விடைபெற்றுச் செல்லுங்கால், சீடன்கையிலிருந்த தங்கக் கிண்ணத்தை வாங்கி அவ்வீட்டிலே இரகசியமாக வைத்துவிட்டுப் போயினர். சீடனுக்கு ஒன்றுமே விளங்கவில்லை; "அவ்வள்ளலின் வீட்டில் களவாடினீர், இந்த லோபிக்கு இலாபம் ஆக்கினீர்; என் இது நீர் செய்தவாறு!" என்று இடித்துரைக்கவும், "மைந்தா, சற்றேநீ சும்மாவிரு: எல்லாம் நான் கடவுள் செய்வதுபோல்தான் செய்கின்றேன்" என்றனர் துறவி. "நல்ல கடவுள் அது!" என்னப் பெருமூச்செடுத்தான் சீடன். "நல்ல நல்ல மிக நல்ல கடவுளே" என்று இனிதுகூறி நகைசெய்த துறவி அவனுடன் மேல் நடந்தனர்.

அற்றை நாள் மாலை இவர் சென்று சேர்ந்த ஒரு கிராமத்தில், தென்பட்ட ஒரு மாளிகையை அடைதலும், அதற்குடையவன் இவர்களை இனிது வரவேற்று, "நீங்கள் இவ்விரவு இங்குத் தங்கி இதனை உங்கள் மனைபோலவே பாவித்து வேண்டிய அனைத்தும் பெற்றுச் சுகமுற இருங்கள்; நான் ஒரு அவசர காரியமாக அயலூர் செல்லவேண்டியிருக்கின்றது; காலையில் சந்திக்கின்றேன்" என்றுகூறி, இவர்களை நன்கு உபசரிக்கும்படி தனது ஆட்களுக்குக் கட்டளையிட்டுப்போயினான். அவ்வாறே இவர்களும்அங்குவேண்டியனபெற்று இனிதிருந்தனர். பொழுதுபுலர்ந்ததும் அம்மாளிகைக்கு உரியவன் வந்து சுகம் வினவினான். துறவியும் ஏற்றனகூறிவிடைகொள்ளுங்கா லவனது பதினான்குவயதுச் சிறுவனைத் தமக்குச் சிறிது வழித்துணையனுப்பவேண்டினர். அதற்கவன், 'இவன்எனக்கோரேமைந்தன், என் உயிரேயனையவன். அவனையோ அனுப்ப மனம்வரவில்லை. ஆயினும், நீர் கேட்பதை மறுப்பது அழகன்று. அழைத்துச் சென்று விரைவில் திருப்பிவிடும்" என்று கூறினான். இம்மூவரும் செல்லும் வழியில் ஒரு நதியைக் கடக்கவேண்டி வந்தது. அப்பொழுது அந்தத்துறவி அச்சிறுவனை ஆற்றினுள் ஆழ்த்திக் கொன்றுவிட்டார். இதனைக் கண்டு நடுங்கினான் சீடன். துறவியைத் துரோகி யென்று ஏசினான். அதற்கு அத் துறவி, "மைந்தா, சற்றே சும்மாவிரு; எல்லாம் நான்கடவுள்செய்வது போலத்தான் செய்கின்றேன்" என்று பண்டேபோல் பகர்ந்தனர். அவனும், "நல்ல கடவுள் இது" என்னச் சீறினான். இவரும், "ஆம், நல்ல நல்ல மிகநல்ல கடவுளே அது" என்று, அவன் சீற்றத்தைப் பொருட்படுத்தாமற் சாற்றினர். சீடனால் இனி ஆற்றுதற்கியலவில்லை. "கடவுள் இயற்றுவதெல்லாம் இப்படியேயாயின் இல்லாதொழிக அக்கடவுள், கெடுககெடுக, அக்கடவுள்" என்று பதறிய சீடனின் தோள்களை இத் துறவி அன்புடன் பற்றி, "மைந்த, மூளுஞ்சினத்தால் மூர்க்கனாகாதே. இதுகாறும் கடவுள் செய்ததுபோன்றே செய்தேன், இனி, அவர் ஒருபோதும் செய்யாத தொன்றையுஞ் செய்யப் போகின்றேன்; அதனையுங் காண்க" என்று இயம்பினர். "என்ன அது!" என்று வெறுப்புடனே விந்தையுந்தோன்றவினவினான், சீடன். "கடவுளோ

தான் செய்கின்ற காரியங்களுக்குக் காரணங் கூறுவதில்லை. நான் செய்தவைகளுக்குக் காரணஞ் சொல்கிறேன், கேள்" என்றனர் துறவி. சீடனும் தன் உடலெல்லாம் செவியாய் நின்றனன்.

"முதல்நாள் நாம் சென்றுதங்கிய வீட்டிற் குடையவன், மிக்க நல்லவன்; ஆதலால்,அவனது பகைவன் ஒருவன் அவனைக் கெடுப்பதற்குச் சூழ்ந்த தீமைகள் ஒன்றும் அவனைச் சேரவில்லை.இதன்மேல்,உறவாடிக் கெடுப்பதே உபாயமாமென்று அப்பகைவன் இவனுடன் பொய்யுறவு காட்டி வந்துளான். அதனை மெய்யென நம்பியுள இப்பேதை அவன்பொருட்டு வைத்ததோர் விருந்தேயாம் அது. தாம் பூண்ட புதுநட்பைப் பாராட்டுவான் போல் பாவித்த அவ்வஞ்சகன், இவனுக்குப் பரிசிலாகத் தந்த ஒரு பொற்கிண்ணத்தையே நான் களவாடிவந்தேன். அதனின்று இவன் பானம் அருந்தும்போது கலந்து கொல்லும்படி அக்கிண்ணத்துள் விடம்பூசி வைத்திருந்தானப் பாதகன். அதனையறிந்தே நான், இந்தத்தீங்கு இந்நல்லவனுக்கு நேராவண்ணம் அப்பொற்கிண்ணத்தை எனது அங்கியில் கரந்து கொணர்ந்துவிட்டேன்"

"நம்மை வைக்கோல் போரில் படுக்கவைத்த அந்த லோபியின்வீட்டில் அப்பொற்கிண்ணத்தை வைத்ததற்குக் காரணம் சொல்லுகின்றேன், கேள். இவன் பிறருக்கு ஈயாத பாவியாவதுடன் சிற்றின்ப நுகர்ச்சிகளில் ஆழ்ந்து உழன்று அவன் பொருளையெல்லாம் செலவு செய்கின்றான்! அவனது புதல்வன் நல்லவன், தருமசிந்தையு முடையவன். ஆதலால், அத்தீயோன் மாய்ந்து நல்ல இம் மைந்தன் கைகளுக்கு அப்பொருள் விரைவில் வந்து நற்பயன் அடையட்டும் என்ற எண்ணத்துடனே, விஷம் பூசிய கிண்ணத்தை அங்கு வைத்தேன்.

"மூன்றாமவன், மிக நல்லவன், உதாரசிந்தையுடையவன், தன் ஒரு புதல்வனிடம் அளவற்ற ஆசை வைத்தவன். அம்மைந்தனுக்கு மிகப் பெருஞ் செல்வம் ஈட்டிவைக்கவேண்டுமென்ற ஆவலினால், வேறு வழி காணாமல், ஒரு இராக்கொள்ளைக் கூட்டத்திற்குத் தலைவனாக இருக்கின்றான். அவ்விரவு அயலூரில் வேலையிருந்ததென்றுசென்றதெலாம்கொள்ளைக்கே. இம் மைந்தனோ கெட்ட குணமும் தீய வொழுக்கமும் உடையவன். இவன்மேல் வைத்த ஆசையினாற்றான் அவனும் கொள்ளையும்கொலையும் புரிகின்றான். அல்லாக்கால் அவன் அதுசெய்யான். ஆதலால் அம்மைந்தனைக் கொன்றேன்."

பழுதற்ற காரணங்கள் இவை ஆவதையச் சீடன் உணர்ந்துகொண்டது அருமையன்று. கடவுள் செய்யாதவொன்றைச்செய்து இத்துறவி காரணங்காட்டினதினின்று அது தெரியவந்தது. மற்று,கடவுள் கூறாதிருப்பினும் இத்தகைய காரணங்கள், அவரவருக்குரிய நீதிக்கும் நன்மைக்குந் தக்கபடி இல்லாமற்போகவில்லை என்னுமொரு நம்பிக்கை நிலைப்பதற்கு உரிய சாதனங்களைக் கைப்பற்றுவோமாயின், அதன்பிறகு அவருடைய சித்தம் எவ்வாறு இருக்கின்றது என்பதைத் தெரிந்துகொள்ள நாம்செய்கின்ற முயற்சிகள் இடையூறடையாமல் நடைபெறும்.

இந்நம்பிக்கை, அழகின் தத்துவத்தோடு பழகுவதால் வரும். அன்னவர்களோடு கடவுள் நேரேபேசித் தம் கருமத்தின் நியதியைத் தெரிவிக்கின்றார். இதன் விரிவு பாவிக அணியைப்பற்றி எழுதியுள்ள முன்னுரையில் காணப்படுகின்றதாதலின் இங்கு இதனோடு நிறுத்திக்கொள்ளலாம்.

---

# சூளாமணி

4. இரதநூபுரச் சருக்கம்

[37-வது பக்கத் தொடர்ச்சி]

58. இந்த நீர்நிறைந்த குளத்தையும் அதனிடையே விளங்குகின்ற நீராழிப் பள்ளியினையும் பாருங்கள். இக்குளத்திலும் அந்தப்பள்ளியைச் சுற்றிலும் கருங்குவளையும் செங்கழுநீரும் செந்தாமரையும் உங்கள் கண்போல விரிந்து கண்டோர் மனத்தைத் திகைக்கச் செய்கின்றன. பூவம்புகொண்ட மன்மதனையும் இவ்வாறு இவை மனங்கலங்கச்செய்து மருட்டுமன்றோ! அருமையான பச்சைச் சிறகோடு விளங்கும் கிளிபோலப் பேசும் பெண்களே! இவ்விளவேனிற் காலத்தே காதலரை யில்லாதவர்கள் உயிர்பிழைத்து வாழமுடியுமோ!

60. இவ்வாறு உரிமைகாப்பாளராகவந்த பெண்களோடும் தன்மனைவியோடும் மன்னவன் உரையாடி இளவேனிற்காலத் திருவிழாவிற் கலந்துகொள்கின்றான்.அப்பெண்களும் இவற்றைக்கண்டு வியப்பெய்தி நிற்கின்றனர்; அரசர்க்கோ ரெண்ணம் தோற்றுகின்றது. பூப்பறிக்கின்றான். பின்னே பேரொளி மணிகள் இழைத்த மதிலிடையே கடவுட்கெனப் பொன்னாற் சமைத்த திருக்கோயிலினுள்ளே, பூவோடும் புகுகின்றான்.

இளவேனிற் றிருவிழாவைப் புலவர் பலரும் பாடியுள்ளார்கள். நளன் அன்னத்தைப் பிடிக்கச்சென்றது இவ்விளவேனிற் போதில்தானே. நைடதமும் இவ்விளையாட்டைப் புனைந்துரைக்கின்றது. நளவெண்பாவும் பெண்களோடு நளன் விளையாடி அன்னத்தைப் பிடித்ததைப் பாடி இருக்கிறது. யசோதர காவியமும் புகழ்கின்றது. தோலாமொழித்தேவர் தம் போக்கைச் சிறிது உற்றுநோக்குவோம். இளவேனிற் றிருவிழா அங்கேயே முடியாமல் நம்மை உயரத்தூக்கிச் செல்கின்றது. இம்மனமாற்றத்தைப் பன்முறையும் நம் புலவரே வற்புறுத்துவதைக் கண்டோம். "பைங்கண் மால்யானையாற்கும் பருவம்வந் திறுத்ததென்றாள்" என்று யானைமீதேற்றுகின்றார் அரசனைத் தோலாமொழித்தேவர். ஈது அரச செல்வத்தில் திளைக்கும் அவன் மனத்தைக் குறிக்கின்றதென யாவரும் ஒப்புவர். அத்தகைய மனத்தை இன்பத்தில் செலுத்துகின்றாள் இவ்வயந்ததிலகை. அவள் ஓதிய மந்திரம் இயற்கையைப் புனைந்துரைக்கும் பாடலேயாம். இளவேனிற் பொழிலிடையே புகுகின்றானிவன்,விளையாடுகின்றான்; 'தனியவரை முனிவு செய்யும் தனிஇளவேனில்,எனப்புகழ்கிறான். தனியிருக்கும்தன்பெண்ணின்நினைவு வருகிறது. அவட்கெனவாழும் அன்பு கொழுந்துவிடுகிறது; "கடவுளவனைக் காப்பாராக." இவ்விளவேனிற் பூக்களனைத்தும் இறைவனடியிலே

அருள்பொழிந்துஇன்பமாய் மலரும் அன்றோ. பூப் பறிக்கின்றான். திருக்கோயிலினுள்ளே புகுகின்றான். அறநெறிவாழ்ந்து அரசசெல்வத்தில்நிற்பவன் இன்பவழியே இளவேனிற்பொழிலில் புகுந்து, பெண்ணிலையைஎண்ணிப் பேரன்பு வடிவாகிப் பெருவீட்டை நோக்கி அவ்வழியே திரும்புகிறான். இயற்கை இன்பம் இறைவனிடம்கொண்டு செல்லும்என எடுத்துக் காட்டிய தோலாமொழித் தேவரின் பாவன்மையை இவ்வுலகம் இன்றேனும் போற்றிப் பாராட்டி அவ்வழிநடக்க முயலின் இன்பவுலக மாகிவிடுமன்றோ!

தன் மனைவியைப் புகழ்வான் உடன்வந்த தோழியரையும் கூட்டிப்புகழ்கின்றான். இவ்வாறு தோழியரோடு பேசுதல்நம் பண்டைய தமிழ்வழக்கு ஆதலின் 'இளையவர்' என்றமையால், இவனுக்குக் காதலிமார் எண்ணிறந்தார் எனக் கொள்ளவேண்டா. நளனோடு விளையாடியமடந்தையர் அவனுடையகாதலிமாரோ? "உயர்ந்த தன் னுரிமையோடும் உரிமை காப்பவர்களோடும் நண்ணினன்" என்றார். பல காதலிமாரை எங்கேனும் சுட்டியுளரோ? நம் மனத்தே தோன்றுவனவற்றை நம் புலவர்மனத்தே புகுத்துவதும் அழகோ! இங்குப் பேசியதுபோலக் காதலிமாரிடத்துத் தான்பேசக்கூடும் என்பர் சிலர். மனைவியை விளித்துளான்;தோழியர்களும்உடன்இருத்தலின் அவர்களை முன்னிலைப்படுத்தினான்; உண்மையில் இவன் பேசுவது இவன் மனைவியோடுதான் என்க.

தாயத்தின் அடையா ஈயச் செல்லா
வினைவயிற் றங்கா வீற்றுக் கொளப்படா
எம்மென வரூஉம் கிழமைத் தோற்றம்
அல்லா வாயினும் புல்லுவ உளவே

என்று தோழிக்கும் இவ்வாறு பேசும் உரிமையைக் கொடுத்த தொல்காப்பியரது தமிழ்க் கொள்கையை உணர்ந்தால் இத்தகைய ஐயங்கள் எழமாட்டா.

தன்காதலியோ டரசன் பொழிலிடையே இனிதே உலாவிக் கண்ட பொருள்கள் அனைத்தும் காதலியை நினைப்பூட்ட இன்பஅன்புலகில் வாழ்கின்றமையைத் தோலாமொழித்தேவர் மிக அழகாகப் புனைந்துரைத்துள்ளார். இன்பத்திற் றிளைப்பவர் அவ்வின்பத்திலேயே திளைத்து நிற்குநிலை யொன்று; அதனை மறித்துணர்ந்துபேசிப் புகழுநிலை மற்றொன்று. பின்னையது முன்னதற்குப் பின்னே எழுவதாம். பேரின்பத்தில் அழுந்திநிற்கின்றவர் பேசுவதில்லை. தோலாமொழித்தேவரின் அரசனோ பேசலாகின்றான். ஆதலின் இது பின்னிலையே யாகும். இதன் முன்னிலையை யுணர்ந்த கம்பர் இவ்வழகுக்கே அழகு செய்கின்றார். அரசன் பேசியது கேட்டோம்; அரசியின் பேச்சைக் கேட்டிலோம். அஃது எங்ஙனம் இருந்திருக்கும் என்னக் கனாக்கண்டு பாடுகின்றார் கம்பர். கோதாவரி யாற்றங் கரையில் சீதையும் இராமனும் நடந்து செல்கின்றனர்.

நாளங்கொள் நளினப் பள்ளி
நயனங்க ளனைய நேமி
வாளங்க ளுறைவ கண்டு
மங்கைதன் கொங்கை நோக்கும்
நீளங்கொள் சிலையோன் மற்றை
நேரிழை நெடிய நம்பி
தோளின்கண் மனம்வைத் தன்ன
சுடர்மணித் தடங்கள் கண்டாள்.
[நேமிவாளம் - சக்ரவாளம், நாளம் - தாமரைக் காம்பு]

ஓதிமம் ஒதுங்கக் கண்ட
உத்தமன் உழைய ளாகும்
சீதைதன் நடையை நோக்கிச்
சிறியதோர் முறுவல் செய்தான்
மாதவள் தானும் ஆண்டு
வந்து நீர் உண்டு மீளும்
போதகம் நடப்ப நோக்கிப்
புதியதோர் முறுவல் பூத்தாள்.
[போதகம் - யானை, ஓதிமம் - அன்னம்.]
வில்லியல் தடக்கை வீரன்
வீங்குநீர் ஆற்றின் பாங்கர்
வல்லிகள் நுடங்கக் கண்டான்
மங்கைதன் மருங்குல் நோக்க
எல்லியங் குவளைக் கானத்
திடையிடை மலர்ந்து நின்ற
அல்லியங் கமலங் கண்டாள்
அண்ணல்தன் வடிவு கண்டாள்.

என்னுமிது கம்பன் கண்ட இளவேனிற்றிருவிழா. இதன்மேல் எப்புலவர் மனமும் சென்றதில்லை. "ஞானமென்பது மோனவரம்பு"—இராமனிடத்தே சிற்றின்பம் பேரின்பம் என்ற வேறுபாடில்லையாதலின் இவ்வாறு பாட இயன்றது கம்பருக்கு. தோலாமொழித்தேவர் இன்பத்தில் இருந்து நம்மைக் கோயிலுக்குக் கொண்டுசெல்கிறார். ஆதலின் இவ்வாறு இதனை முடிந்த முடிபாகப் பாட இயலாது. திருவிழாவிலே ஒலி மிகுமேயன்றி வாளாநின்றபேச்சற்ற பெரு நிலை தோன்றாது. ஆதலின் அரசனைப் பேசவைக்கின்றார் நம் தோலாமொழித்தேவர். எனினும், கம்பர்கண்ட பழுத்த நிலையே இங்கு அரும்பு விட்டுப் பூத்திருக்கின்றதென அறிந்தால் தோலாமொழித்தேவர் பாக்களினால் காணக்கிடக்கும் அன்பு நுட்பத்தை உணர்வோம். வாளாநின்று இன்பந்துய்க்கும் அரசியின் மனத்தி னின்பநுட்பத்தையும் கம்பன்கண்கொண்டு கண்டு இன்புறுவோம்.

உருட்டுக் கல்லெனத் திரண்ட தோளனாய் உடல்நலத்தில் தலைநின்றான் உயிர்நலத்தில் தலைநின்றவனாய்க் கடவுளெதிர் செல்லுகின்ற காட்சியே காட்சி. அன்னவனுக்கு உவகைமிகுகின்றது. அழகியதொரு கோயில் - கடவுள் வாழும் கோயில்-தன் முன்னோர் வழிவழியாக வழிபட்டுவந்த கோயில் - இத்தகைய கோயிலைக்கண்டதும் இன்பமீதூர அன்போடும் தூய்மையோடும் வலமாக முறையே சுற்றி வருகின்றான்; கதவெதிரே நிற்கின்றான்.என்ன அழகிய கதவு.இவனுடைய அன்பே பேரொளி நன்மணிகளாய் உருக்கொண்டு, பலவகை மணிக்கலன்களாய் ஒருங்கியைந்ததே அக்கதவம் எனலாம். அம்மணிகளின் ஒளியே புன்னகையாகக் கொண்டு விளங்குகிறது அக்கதவம்; இவன் வந்ததும் இக் கதவம் திறக்கின்றது. இன்னவாறு திறக்கின்ற சூழ்ச்சியை நச்சினார்க்கினியர்"அரசன் வருங் காலத்துப் பிறர் புகுதாமற் கதவடைத்து அவனுக்குத் திறத்தல் இயல்பு" என்று சிந்தாமணியுரையில் விளக்கிவைத்திருத்தல் காண்க. போற்றிகளால் திறக்கப்பட்டது என்று கொள்ளினுமாம்.

62. கடவுள் வாழும் மணிநிலையின் சுடரொளி மலர்கிறது. காண்கின்றான் அரசன். கடவுளின் திறமனைத்து மவ்வொளிவழியே அவனுக்கு வருகின்றன. அவ்வருகன் திறமையை அளவிடப் போமோ! தொழுவார்தம் நோயைநீக்கிக் கட்டை அவிழ்த்து இன்

பம் அளிக்கின்ற திறமையை என் என்போம். இனி வந்து பிறவாதபடி இன்பமளிக்குந் திறமையை என் என்போம். கட்டு நீங்கிப் பிறவி யொழிந்ததும் உயிர் சென்று புகும் அழகொடு நிலைநிற்கும் விண்ணுலகை வீட்டையும் தந்து இன்பமளிக்கும் திறமையை என் என்போம். இவையேயன்றி வேறுபிற வரங்களையுந் தந்தளித்து இன்பமளிக்குந் திறமையை என் என் போம். அளவில் திறனொடு நின்ற கடவு ளிருக்கை நிலை கண்கவர் ஒளியோடும் இவ்வாறு அரசனுக்கு நினைப்பூட்டி, எதிரில் இனிதே விளங்குகின்றது.

காண்கிறான் அரசன். பேரின்பத்தில் மூழ்குகின்றான். உடலெலாம் மயிர்க்கூச் செறிகிறது. கடவுள் ஒளி அவனுடலில் பொங்கி வழிகின்றது. பூ முடித்த திருமுடியில் தன் கையையே முகிழ் மலராகக் கூப்பி விரைந்து தொழுகின்றான். வெய்யிலில் புழுவை உருட்டுவது போல நம்மை உலகில் உருட்டி வாட்டும் வினைகளைத் துகள் துகளாக்கி வென்ற வெற்றி, செக்கச் சிவந்து மலரென்ன மெல்லியதாய் இன்ப அன்பொடு மலர்ந்து திருந்திய அத்திருவடியதேயன்றோ. அதனைஎண்ணி அதன் தனிச்சிறப்பைப்பாடிப்புகழ்கின்றான் அரசன்.

---

# ஒத்தெல்லோ

## [Shakespeare's—"Othello"]

அங்கம் 1. களம் 2.

[42-வது பக்கத் தொடர்ச்சி]

ப்ரபான்ஷியோவும், ராடரிகோவும்,
சில இராணுவ உத்தியோகஸ்தர்களும்,
தீவர்த்திகளுடன் ஆயுதங்களை
ஏந்திக்கொண்டு வருகின்றனர்.

---

ஒத்தெல்லோ:—யாரது! நில் லங்கே!

ராடரிகோ.—ஐயா, மூரன் அது![1]

ப்ரபான்ஷியோ:—தள்ளுங்கள் அவனை, திருடன்!

[இருதிறத்திலும் வாள்களை உருவிக்கொள்கின்றனர்]

இயாகோ:— ஏ, ராடரிகோ, வா, ஐயா, வா, நானிருக்கின்றேன் உனக்கு.[2]

ஒத்தே:—ஒளியுடை யுங்கள்வாள்களை உறையுள் இடுங்கள்; இல்லையேல் பனிபட்டு அவைகளில் துருவேறிவிடும்[3]—பெரியீர், நும் வாளினும் வயதைக் கொண்டே அதிகம் கட்டளையிட்டிடலாமே.[4]

ப்ரபா:— ஏ ஏ பாதகக் கள்வா, என் புதல்வியை எங்கே பதுக்கிவைத்திருக்கின்றாய்? நாசமாய்ப் போகும் நீ அவளை மந்திரத்தால் மயக்கிவிட்டாய்.[5] மாயச் சங்கிலியில் அவள் கட்டுண்டிலளோ; இத்துணை மென்மையள் அழகள் சுகமுடையவள், எங்கள் சாதியைச்சேர்ந்த சுருண்டகுஞ்சிச் செல்வக் கண்மணிகளைத் தவிர்ப்பவளாகி வதுவையை அத்துணை எதிர்த்திருந்த ஒரு கன்னி, எங்கேயாயினும், பொதுப் பரிகசத்திற்கே ஆளாக, தன் காவலைவிட்டு, உன்னைப்போன்ற ஒன்றின் கரிபடிந்த மார்பின்பால், அகமகிழ்தற்கன்றி அஞ்சுவதற்கே, ஓடுவாளோ; அறிவுடைப் பொருள்களனைத்தையும் கேட்கின்றேன்.[6] பாதகமுடைய மந்திரங்களால் அவளை வஞ்சித்து, சலனத்தை ஒடுக்குகின்ற ஔடதங்களும் லோஹாதிகளுங் கொண்டு அவளது மிருதுவான இளமையை நீ அக்கிரமஞ் செய்ததை என்பது புலனுக்குத் தடித்திருக்கவில்லையோ, உலகமே எனக்குச் சொல்

(1) இது, ப்ரபான்ஷியோவிற்கு ராடரிகோ சொன்னது.

(2) உன்னை எதிர்க்க நான் இருக்கின்றேன், என்பது பொருள். இங்கு ராடரிகோவின்மீது இயாகோவிரைந்து பாய்கின்ற இச்செய்கை, இக்களத்தின் முதலில் இவன் ஒத்தெல்லோவினிடம் வெகுண்டு பேசியது ராடரிகோவைப்பற்றியே என்று நினைக்க இடந்தருகிறது. இதனால், தன்சினம் உண்மையேயென்றும் ஒத்தெல்லோவிற்கு உணர்த்துகின்றான் இக்கபடன். பொய்யே தன்னைப் போரிற்கு இவனழைக்கின்றான் என்பதுபற்றி ராடரிகோவிற்கும் சந்தேகமிருக்காது. அதுவுமன்றி, இயாகோ, தன்னுடையசூழ்ச்சிகளை நடத்துவதற்கு அவ்வசடன் ராடரிகோவைக் கருவியாக உபயோகப்படுத்திக்கொள்ள நினைத்திருக்கின்றானாதலால், அவனுக்குத் தீங்குநேராதபடி காப்பதற்கு இது நல்ல உபாயமும் ஆகும்.

(3) இது, தன் திறத்து இயாகோவையுங் காஸ்ஸியோவையும் நோக்கிக் கூறியதாதல் வேண்டும்.

(4) பெரியீர், உமது வயதைமதித்து நான் அடங்கினால் அடங்குவேனே யொழிய, உம்முடைய வாளிற்கு அஞ்சி நான் அடங்குவேன் என்று எண்ணாதீர்—என்பது பொருள்.

(5) முன்னே, இவன் சந்தேகப்பட்டு ராடரிகோவைக் கேட்டதைப் பின் நிச்சயமாகக்கருதிக்கொண்டு "வசியமந்திரங்களால் டெஸ்டிமோனாவை நீ அபகரித்துவிட்டாய்" என்று ஒத்தெல்லோவின்மீது குற்றம் ஏற்றுகின்றான்.

(6) அவள் கட்டுண்டிலளோ... ஒரு கன்னி... மார்பின்பால் ஓடுவாளோ... கேட்கின்றேன்... என்று முடித்துக் கொள்க.

சுருண்ட குஞ்சிச் செல்வக் கண்மணிகள் - சுருண்டு அழகிய தலைமயிரை யுடையவரும், செல்வமுடையவரும், பெண்களால்தம்முடைய கண்மணிபோல் விரும்பிப்போற்றத் தகுந்தவரும் (சுயசாதியைச் சேர்ந்தவர்களும்) ஆகிய வெனிஸ் நகரத்து இளைஞர்கள்.

அன்னவர்கள் இவள்பால் காதல்கூர்ந்தனர். ஆயினும் அவர்களை இவளோ ஏற்றுக்கொள்ளாமல் தவிர்த்தனள் என்றால், கலியாணஞ் செய்துகொள்ள இவளுக்குச் சிறிதேனும் இஷ்டம்இல்லாமல் வதுவையை எதிர்த்திருந்தாளென்பது தெரியவில்லையா! (வதுவை - கலியாணம்).

உன்னைப்போன்ற ஒன்றின்—என்பது ஒத்தெல்லோவை இகழ்ந்து கூறியதாம். அவன் கருநிறத்தைப் பழித்துக் 'கரி படிந்த மார்பு' என்கின்றான்.

அகமகிழ்தற்கன்றி அஞ்சுதற்கே - உன் கரிய மார்பைக் கண்டு பெண்கள் அஞ்சுவார்களே யன்றி மகிழமாட்டார் - என்கின்றான். தன் காவலை விட்டு - என்றால் பாதுகாக்கப்பட்டிருந்ததை விட்டு.

பொதுப்பரிகசத்திற்கேஆளாக-'இந்தக் கணவனையா நீ தேடிக்கொண்டாய்' என்று எல்லாரும் பரிகசிக்கும்படி - என்பது பொருள்.

அன்னவள், என் பாதுகாவலைவிட்டு, உன்னை மணக்க மனம்விரும்பி, எங்கேயாவது ஓடிவருவாளா? மாட்டாளாகையால், அவளை மாயமந்திரங்களால் வசியம் செய்து நீ கவர்ந்துகொண்டாயேயொழிய வேறில்லை - என்கிறான் பரபான்ஷியோ!

லட்டும்[7]—இதனை நான் வழக்காடியே பார்ப்பேன். இயல்வதே இது, எண்ணத்திற்குந் தொட்டறியக் கூடியதாயிருக்கின்றது.[8] ஆகையால், உலகத்தை அக்கிரமஞ் செய்கின்றவனென்னவும், தடுத்து மறுக்கப் பட்டிருக்கிற தொழில்களைப் பயில்கின்றவனென்னவும், உன்னை நான் பற்றிச் சிறைகொள்கின்றேன்.[9] பிடியுங்கள் அவனை; எதிர்ப்பானாயின், அவன் பொறுப்பிலே, அடக்குங்கள்.[10]

ஒத்தே:–என்பக்கல் சாய்வோரும், ஏனையோரும், நிறுத்துங்கள் உங்கள்கைகளை[11]. சண்டைசெய்வது என் பாகமாயின், தூண்டுவோன் ஒருவன் இல்லாமலே அதனை அறிந்திருப்பேன் [12] — நீர் ஏற்றும் இக்குற்றத்திற்கு உத்தரம் சொல்ல நான் எங்குப் போதல்வேண்டுமென்று விரும்புகின்றீர்.

ப்ரபா:–சிறைச்சாலைக்கு;சட்டத்திற்குரிய காலமும் நீதிமன்ற நியமனங்களும் உத்தரஞ் சொல்லுமாறு உன்னைக் கூப்பிடும் வரை...[13].

ஒத்தே:—இதற்கு நான் உடன்பட்டுவிட்டால், என்னும்? [14] துரைத்தனத்தின் அவசரமான ஏதோ காரியத்தின்பொருட்டு என்னைத் தம்மிடம் கொணரும்படி, இங்கென்னைச்சூழ்ந்திருக்கின்ற தூதர்களை ஏவிய துரைத்தனத்தலைவர் அதனால் எவ்வகையில் தன் விருப்பம் நிறைவேறினவ ராவார்?

முதல் உத்தியோகஸ்தன்:—உண்மையேயது, பெருந்தகைப்பெரியீர்; துரைத்தனத்தலைவர் சபையமர்ந்திருக்கின்றார்; கனம்பொருந்திய நும்மையும் அழைத்துவர அனுப்பியிருப்பார், நிச்சயம்.

ப்ரபா:—எப்படி! இந்தத்தலைவர் சபையமர்ந்திருக்கின்றாரா! இரவு இந்நேரத்திலா!கொண்டுவாருங்கள் இவனை: என்வழக்கு வீண்வம்பு வழக்கன்று: அந்தத் தலைவரேயும், இத் துரைத்தனத்தைச் சேர்ந்த என் சகோதரர்களில்யாவரும், இந்த அநீதி தமக்குநேர்ந்ததே போல் உணராமற் றீராது. ஏனெனில், இத்தகைய செய்கைகள் தடையின்றி வழிபெறுமாயின், தொழும்புசெய் அடிமைகளும் கல்லைக் கும்பிடும் புல்லர்களுமே நம் ராஜ்யகாரிய நிபுணர்கள் ஆகக்கடவார்.[15]

(போகின்றனர்)

இரண்டாங் களம் முற்றிற்று.

அறிவு......கேட்கின்றேன் - அறிவுடையவர்கள் யாரைக்கேட்டாலும்,நான் எண்ணுவதே நேர் என்று சொல்லுவார். யாரை வேண்டுமானும் எதனைவேண்டுமானாலும் கேட்டுப் பார்க்கலாமே - என்பது கருத்து.

(7) சலனத்தை ஒடுக்குவது - புத்தியை மந்தமாக்கி உணர்ச்சியைப் பலவீனப்படுத்துவது. ஔடதமும் லோஹங்களும் - பச்சிலைமருந்துகளும், தங்கம் தாமிர மனைய லோஹங்களாற் செய்த பஸ்மங்களும்.

புலனுக்குத் தடித்திருத்தல் - (நீ அவளை மருந்தும் மந்திரமுங் கொண்டே வஞ்சித்திருக்கின்றாயென்பது) அறிவிற்குப் புலனாவது அருமையாகதபடி அவ்வளவு பருத்தவோர் விஷயமாய் மலையிலக்காகி நிற்கின்றது.

இவ்விஷயம் வெளிப்படையாக இல்லையோ என்பதை உலகத்தில் யாரைவேண்டுமாயினுங் கேட்டுப்பார்க்கலாம்.

(8) இது நடக்கக்கூடிய காரியமே. எண்ணிப்பார்க்கும்போது, இப்படியே நடந்ததென்று ஊகிப்பதின்றி, மனதானது இந்நிகழ்ச்சியைத் தொட்டுப்பார்த்ததுபோல் அத்துணை நிச்சயமாகத் தென்படுகின்றது.

(9) தடுத்து மறுக்கப்பட்டிருக்கின்ற தொழில் - வசிய மந்திரங்களாலும் மருந்துவைத்தும் பெண்களை மயக்கி அக்கிரமங்கள்செய்து உலகத்தைக் கெடுக்கின்ற இந்தக் காரியம் சட்டத்தால் தடுக்கப்பட்ட குற்றமாம்; அதனை நீ செய்ததால் உன்னைச் சிறைப்படுத்துகின்றேன்.

(10) எதிர்ப்பானானால் அவனைப் பலாத்காரமாக அடக்குங்கள்; அதனால் அவனுக்குத் தீங்குநேர்ந்தால், அந்தப் பொறுப்பு அவனுடையதேயன்றி நம்முடையதன்று.

(11) என்பக்கல் சாய்வோர் - என் சார்பு பரிந்து சண்டைசெய்யப் புகுவோர்.

(12) எனக்காக ஒருவரும் சண்டை செய்யவேண்டா. சண்டையிடவேண்டுமென்பது என்னுடைய கருத்தாயின் உங்கள் தூண்டுதல் இல்லாமலே செய்திருப்பேன்; ஆகையால் நீங்கள் சும்மாவிருங்கள், என்பது பொருள். பாகம், தூண்டுவோன், என்னும் இச்சொற்கள் நாடகமேடைக்கு உரியன. ஒரு பாகம் ஏற்றுக்கொண்டு நடிப்பவன், செய்ய வேண்டியவைகளையும் சொல்ல வேண்டியவைகளையும் மறந்துவிடாதபடி, மறைவிலிருந்து அவ்வப்போது சிலர் தூண்டித் தருவார். மற்றிங்கு, இவர்களோடு தான் சண்டையிட வேண்டியது தனது பாகத்திற்குரிய செய்கையாயின், தன்சார்பு நிற்பவர் சண்டையைத் துவக்கித் தன்னைத் தூண்டவேண்டிய அவசியமில்லை—என்கின்றான்.

(13) வரை...நீ சிறையில் இருக்கவேண்டும்— என்று முடித்துக்கொள்க.

(14) சிறைப்பட்டு உம்முடன் செல்ல நான் சம்மதித்தால், பிறகு, என்னைத் தன்னிடம் வரும்படி உத்தரவிட்டிருக்கிற துரைத்தனத்தலைவரின்கட்டளை என்ன ஆவது.

(15) எனக்கு இவன் செய்திருக்கின்ற இந்தத்தீங்கு, தமக்கே நேர்ந்திருப்பதாகக் கருதி, துரைத்தனத் தலைவரும்,என்போன்ற ஏனைய செனட் சபை அங்கத்தினரும் இவனைத் தண்டிக்காமல்,இவன் போரில் பெற்றுத் தந்திருக்கின்ற வெற்றிகளையும், இப்பொழுது இவன் துரைத்தனத்திற்கு அவசியமாயிருப்பதையும் எண்ணி, இவனை எளிதில் விட்டுவிடுவார்களானால், பிறகுஅவர்கள் அடிமைகளும் புல்லர்களும் ஆவார்களே யொழிய துரைத்தனத்தைத் தாங்கும் மதிப்பிற்குரியவர் ஆகமாட்டார்.

# அணியிலக்கணம்

## பாவிக அணி

[39-வது பக்கத் தொடர்ச்சி]

தொடர்நிலைச்செய்யுள்களால் அமைந்து ஒரு சரித்திரத்தைச் செப்பும் காவியத்தின் சில பண்பே, பாவிகஅணியா மென்றும், செய்திகளின் உபகாரம், அடைமொழிகளின் அமைதி, வருணனைகளின் அனுகூலம், கருத்துக்களின் தெளிவு, ஆகிய இந் நான்கு பண்புகளும் அமைந்திருத்தல் ஒருகாவியத்தின்கண் பாவிக அணி காணப்படுவதற்கு ஆதாரமாக இருக்க வேண்டுமென்றும் முன்னையஇதழில்கூறியுள்ளோம்.

பாவிக அணியின் இலக்கணம் இன்னதாதலின், யாதானுமொரு செய்யுளை இதற்கு உதாரணமாகக்காட்டுத லியலாமை வெளிப்படை: ஒரு காவியத்தையே முழுமையாக உட்கொள்ளவேண்டியது அவசிய மாகின்றது. இக்கலாநிலயவாசகர்களுக்கு ‘நளவெண்பா’ நன்கு படமாயிருக்குமாதலின், அந்நூலினுள் இப்பண்புகள் அமைந்திருக்கின்ற நேர்மையை உணர்ந்து கொள்வது எளியதாகும்.

நளராஜனுடைய சரித்திரத்தைத்தொடர்ந்து கூறுகின்ற செய்யுள்களால் அமைவதுடன், நாடு நகர வர்ணனைகளாதிய ஏனைய உறுப்புக்களும் கொண்டிருப்

பதால், "நளவெண்பா", நாம் முன்னே இங்குஉரைத்திருக்கின்ற சிறப்புஇலக்கணத்தின்படி ஒருகாவியம் ஆகும். கதையும் சிறியதாய், வருணனைகள் முதலிடனவும் சுருக்கமாய், ஆயிரக்கணக்கின்றி நூற்றுக்கணக்கேயான குறைந்த செய்யுள்கள் கொண்டிருப்பதால், இந்நூல் சிறு காவியம் என்று அழைக்கப்படும்.

ஒற்றுமை உபகாரம்:—

நிடதத்தரசனும் மெய்ம்மை நளனும், பெண்மைக்கரசியாம் தமயந்தியும், அன்னத்தின் தூதினால் காதல்கொண்டு மணந்து, கலியின் சூழ்ச்சியாற் பிரிந்து, பிறகுசேர்ந்துவாழ்ந்த செம்மையைச்செப்புகின்றது இந்தக் கதை. இதன்கண் நிகழ்கின்ற நிகழ்ச்சிகளெல்லாம், நூலின்விஷயமாகிய இக் கதையினைச் சார்ந்து அதற்கு உபகாரமாக அமைந்திருக்கின்ற பண்பினை இக்காவியத்திற் கண்டுஅறிந்துகொள்வது அருமையன்று.

இளவேனிற் பருவம் நண்ணுதலும் நளன், பணிப்பெண்கள் புடைசூழ, பூஞ்சோலைக்குப்போகின்றான். அங்கு ஓர் அழகிய அன்னப்பறவை அவன்முன்னே தோன்றுகின்றது. இவ்வன்னமுந் தமயந்தியின் ஏவலில் இருப்பது; பலதேயத்து மன்னர்களின் குணாதிசயங்களைக் கண்டறிந்துவந்து அப் பருவமங்கைக்கு உரைப்பது இதன் கருமமாம்—(இக்கருத்தின் நுட்பத்தை, 5 வது வால்யூம், 210-வது பக்கத்தில் காண்க.) நளன் அவ் வன்னத்தைப் பற்றுகின்றான்; அஞ்சியதும் அது தீர்ந்ததும் போன்று பாவித்த அவ்வன்னம் தமயந்தியை வருணிக்கக்கேட்ட நளன் அவள்பால் காதல்கூர்ந்து அவ்வன்னத்தையே தூதுபோக விடுகின்றான். அதுவும் வந்து தமயந்திக்கு உற்றதை உரைக்க இவளும் அவன்பால் அருங்காதல் வைக்கலானாள். விதர்ப்பமன்னன் தன் புதல்விக்குச் சுயம்வரம் அமைக்கின்றான்.

நளனிடத்திற்குத் திரும்பிவந்த அன்னம், விளையாட்டுப்புத்தியால் நளனதுமனதினை அலைப்புண்ணக் காணுதலும், அவன்மூர்ச்சையாகிவிடவே, அதனால் அச்சம் மிகுந்தஇப்பறவை, தமயந்தி அவனைக் காதலித்தாள் என்பதைச் சொல்லாமலே பறந்து போய்விட நேர்கின்றது—(இந்நிலைமையின் அமைதியை, 5 வது வால்யூம் 290 வது பக்கத்தில் காண்க)

ஒட்டை மனத்தோடு உயிர்தாங்கியிருந்த நளன் சுயம்வரத்திற்குச் செல்கின்றான். அவ்வழியில், நாரதமுனிவரால் தூண்டப்பெற்று அச்சுயம்வரத்திற்குச் செல்கிற இந்திரன்ஆதிய தேவர்கள் நளனைச் சந்தித் தவனையே தமக்குத்தூதுரைக்கத் தமயந்தியின்பால் போக்குகின்றனர். வாய்மை நெறியன்றி வேறொன்றுஉளதென்று சிந்தித்துமறியாத இந்நளன் அதற்கிசைகின்றான். தமயந்தியின் காதலை உரையாமலே அன்னமகன்றுவிடும்படி நேர்ந்ததும், தமயந்தியை மணங்கொள்ளத்தேவர்கள் அவாவி வருதலும், நளன் தூது செல்லுவதும், இக்கதை நடைபெறுவதற்கு உபகாரமாகி நிற்கின்றன. இடைவந்து சுயம்வரத்தில் தோற்றுப்போன தேவர்கள்தம் வஞ்சினத்தைத் தீர்ப்பதற்கல்லாமல் கலிபுருடன் களத்தினுள் புகுவதற் கில்லை; அவன் வந்திலனாயின் மேலே கதையும் இல்லை. தமயந்தி தன்னைக் காதலித்திருக்கின்றாள் என்பது நளனுக்குத் தெரிந்திருக்குமாயின், அவன் அதனை இப்பொழுதே தேவர்களுக்குக் கூறுவதும், அதுகேட்டு அவர், மற்று இவ்விருதலைக்காதலுக்கிடையே தாம் நுழைவது அழகு அன்று என்று மீண்டு விடுவதும் நேர்வதேயியற்கை. இது நேராமற் காப்பதற்கே அன்னத்தின் அச்சிறுவிளையாட்டைப் புகழேந்திப்புலவர் தம் உதவிக்கு அழைத்துக்கொண்டார். அதுவுமன்றித் தமயந்தியுந் தன்னையே காதலித்திருக்கின்றாள் என்பது தெரிந்தும், வேறொருவர்பொருட்டு மணத்தூது சென்றுரைப்பது, அவளைச் சால நிந்தித்தபடியாகும். வாய்மையும் வழுவாமல் இந்த நிந்தனையும் தோன்றாமல், நளன் தூது நடப்பதற்கு உபகாரமாகவும் அன்னத்தின் அவ்விளையாட்டு நிற்கின்றது.

சுயம்வரத்தில் தமயந்தியின்மணமாலையைப் பெற்றிலர் தேவர் என்ற காரணத்தால், நளனையும் அவன் மனைவியையும் பிரித்து வருத்தக் கருத்துக்கொண்டு தொடர்ந்து வந்த கலி, புட்கரனைக் கொண்டு சூதாட வைத்து, நன்னாடு தோற்பித்து, நளனை அவன் மனைவியோடும் மக்களோடும் காட்டகத்தே சேர்த்துவிடுகின்றான். வழிநடக்கும் வருத்தம் நோக்கித் தம் மக்களை ஒரு அந்தணனுடன் விதர்ப்பநகர் அனுப்பிவைத்து மேற்செல்லும்போது, அவர்முன் பொன்னிறத்துப் புள்வடிவாய்த் தோன்றிய கலியை வளைத்துப்பிடிக்க முயன்றுஅதன் பயனாய், நளனும் தமயந்தியும், ஆவிபோல் ஆடையும் ஒன்றாகின்றார். இந்நிகழ்ச்சி கதை நடப்பதற்கு எவ்வகையில் உபகாரமாகின்றதென்ற ஐயம் எழுவது இயற்கை; இதனைப் பின்னர்ப் பார்ப்போம்.

ஒற்றைத் துகிலினோடு நளனுந் தமையந்தியும் ஒரு பாழ்மண்டபத்தை அடைகின்றார். அங்கு, தமயந்தி கண்ணயர்தலும் நளன் அவள்நலமே கருதி, அவளைவிட் டகல்கின்றான். பொழுதுபுலர்ந்தபின்னர்த் தன்னைத் தனியே கண்டு புலம்பித் திரிந்த தமயந்தி ஒரு பாம்பின்வாய்ப் பட்டு மூழ்குந்தறுவாயில் ஒரு வேடன் பாம்பைக் கொன்று அவளைக் காக்கின்றான். பின், அவளது மானத்திற்கோர் ஊனஞ்செய்ய அவளைத் தொடர்ந்துசென்று சாம்பராய் விழுகின்றான் அவ்வேடன். இந்நிகழ்ச்சி உபகாரமாகின்ற அமைதியையும் பின்னர்க் காண்போம். அவ்வழியே வந்த வணிகனொருவனைத் துணைகொண்டு சேதிநகரம் எய்திய தமயந்தி, தன்னைத் தேடிவந்த அந்தணனுடன் குண்டினபுரஞ் சென்று அங்குத் தன் தந்தையின் மாளிகையில் தன் மக்களோடுந் தங்கியிருக்கின்றாள்.

பனியிருளில் பாழ்மண்டபத்தில் தன் காதலியைத் தனிவிட்டுச் சென்ற நளன், கார்கோடகன் என்னும் அரவுக்கரசனைத் தீயினின்றும் உயிர்காத்து, அந்தப் பாம்பு அபகாரம்போல் உபகாரமாகக் கடித்த விஷத்தினால் உருவம்மாறி, அயோத்திமா நகரம் அடைந்து ருதுபர்ன மன்னனுக்குத் தேர்த்தொழிலும் மடைத்தொழிலுஞ் செய்வானாய் அமர்ந்திருக்கின்றான். கார்கோடகன் கடித்த இந்நிகழ்ச்சியின் அமைதி வெளிப்படை. மானம்போகாமல் நளன் தன் கடவநாட்களைக் கழிப்பதற் கிது உபகாரமாவதுமன்றி, பிறகு தமயந்தி இவனைத் தேடிப்பெறுதற்குச் செய்தசூழ்ச்சியும், ருதுபர்னன் இரண்டாவது சுயம்வரத்திற்கு விரைந்த அந்நகைப்பிற் கிடமான செய்தியும், அவனுக்குத் தேர்க்கோலங் கொண்டு நளன் மீண்டுவந்த தன்மையும், நளனதுவடிவம் மாறியநிகழ்ச்சியையே ஆதாரமாகப் பற்றி நடக்கின்றன.

பின்னர், தமயந்தி தன்நாயகனைத் தேடி அறியுமா

றந்தணனை யனுப்பியதும், தனக்கு இரண்டாம்சுயம் வரம் என்று அயோத்திநகரில் பறையறைவித்ததும் இக் க்தையினை முடிவிற்குக் கொண்டுவர உபகாரமாகின்ற செய்திகளாம். இதற்கு உதவியாய் நிற்கின்றவன் அயோத்திமன்னன் ருதுபர்னன். அம்மன்னவனுக்குப் பாகனாய்ப் போந்த வாகுகன்தான் நளனோ அல்லனோ என்பதைச் சோதித்து அறிவதற்கு, மக்களை அவன்புக்க மடைப்பள்ளியில் விளையாடவிட்ட அந் நிகழ்ச்சி உபகாரமாக நிற்கின்றது. அதன் பின் வீமராஜன் வேண்ட நளன் தன் பண்டைய வடிவத்தை மீண்டும் பெற்று, மாவிந்த நகரம் சென்று புட்கரனின்று தன் அரசைப்பெற்று, கற்பினிற்கணியாம் தமயந்தியோடும், மாண்புடைய தன்னிரு மக்களோடும் இனிது வாழ்ந்திருந்தான்.

இன்னபடி, வாய்மைநெறி வழுவாதவள்ளல் நளனும், அவன் கற்பின்முறை திறம்பாத தேவியும் தலைமையாகப் பெற்ற இந் நூலின்கண் நிகழ்கின்ற நிகழ்ச்சிகள் ஒன்றற்கொன்று தொடர்புடையனவாய், நூலின் விஷயமாகிய கதைக்கு உபகாரமாகஅமைகின்ற பண்புதெரியவருகிறது. மற்று,தேவர்களுக்குநளனை தூது சென்ற செய்தியும், துகிலிழந்ததும், தமயந்தி பாம்பின்வாய்ப்பட்டதுடன் வேடன் நீறாகவேண்டியதும், கதையின் நிகழ்ச்சிக்கு எவ்வண்ணம் உபகாரமாக நேர்கின்றன என்னும் சந்தேகந் தோன்றலாம். தேவர்களுக்கு வேறு யாரேனும் தமயந்தியின்பால் தூதாகச்சென்றிருப்பினும், அல்லது,யாருமே தூது செல்லாதிருந்திருப்பினும், கதையின் நிகழ்ச்சி மாறுபட்டிருக்காதென்பது உண்மையே. அவ்வாறே, தமயந்தி துகிலிழந்ததும் பாம்பின்வாய்ப் புகுந்து அவ்வேடன் அவளைவெளவி நீறாயதும் நேராதிருப்பினும், கதை இப்பொழுது நிகழ்ந்தபடியேதான் நிகழ்ந்து முடிந்திருக்கும். எனினும், கதை நடப்பது நிகழ்ச்சிகளின் தொடர்பினால் மாத்திரமே யன்று; பாத்திரங்களின்குணங்களை நிறுவுவதும்மிகவும் அவசியமாம். ஒருவன் நிகழ்த்துகின்ற செய்கைகளுக்கு ஆதாரமாயிருப்பன அவனது குணங்களே. ஆதலின், அக்குணநிலையைக்குறித்துத்தருகின்ற செய்திகளும் கதையின் நிகழ்ச்சிக்கு உபகாரமானவைகளே என்று கொள்ள வேண்டும். நளனது வாய்மை யறமும், தமயந்தியின் பொறுமையும் கற்பின் உறுதியும் இல்லையேல் இந்தக் கதையும் இல்லை. அனைத்தையும் சூதில் தோற்றுநின்ற நளன்,பணையமாய் வழங்கிய சொல்லைக் காப்பதின்றி மறுத்துவிட்டானா லப்புறம், அப்புட்கரன் யாதுசெய்ய இயலும். அல்லது, தமயந்தி, இடைப்புகுந்து புட்கரனுக்கு நாட்டினை அரசன் வழங்காமல் தடுக்க முயன்றிருப்பாளாயின், பின்னர் இக்கதை வேறு எவ்வண்ணம் முடிவுற்றிருக்குமோ யாரே அறிவார். வாய்மையால்அவனும் நாட்டினை வழங்குதல் வேண்டும், இவளும் கற்பினால் அதனைத் தடுக்காமல் இருக்கவேண்டும். இன்னது செய்யும் இயற்கையர் இவர் என்னக் காட்டுவதற்கே புகழேந்திப்புலவர் இச்சில நிகழ்ச்சிகளையும் அமைத்தனர். தேவர்களுக்குத் தான் சொல்லிய சொல்லை மறுக்காமல், தமயந்தியையும் கோதக்குநிகராகத் தன்மனத்தினின் றகற்றித் தனது வாய்மையைக் காக்கின்ற குணமுடைய ஒருவன் சூதில் தோற்றநாட்டைத் தந்துவிடல் இயற்கையே என்று அந்நிகழ்ச்சியால் வற்புறுத்துகின்றார் புலவர். அவ்வாறே, நன்னாடு தோற்பித்த கலியையும் சபிக்கமனங்கொள்ளாப் பொறுமையுடையவள் தமயந்தியென்பதைப் பொற்புள் நிகழ்ச்சியினால் காட்டுகின்றார் (வால் 5. பக்கம் 745.) ஒரு பாம்பின் வாய் நின்று,உயிரைவிட்டுப் பிரியவும் தன்னுடை நாயகனை விடைகேட்ட பத்தினி இவள், கணவன் இசைந்து செய்யுமொரு காரியத்திற்கு இடையூறு ஆகமாட்டா இயற்கையளாவதும் இப்பின்னைய நிகழ்ச்சியால் எடுத்துக் காட்டப்பெறுகின்றது. இவளது கற்போ, பூண்டிருந்த ஒருவேடம் அன்றென்றும், உள்ளமுடன் சென்ற உண்மைக்கற்பா யிருந்தமையாற்றான், இவள் விழித்த அளவில் வேடனும் நீறாயினான் என்றும் விளக்க நேர்ந்தது கதையின் நிகழ்ச்சிக்கு ஆதாரமாவதால், இது தொடர்ச்சி பிறழ்ந்து விலகியது ஆகாது.

பாவிக அணிக்கு ஆதாரமாகிய உபகாரம் என்னும் அப்பண்பு ‘நளவெண்பா’ எனும் இக்காவியத்தில் அமையுமாறு காணப்பெற்றோம். இனி, இந் நூலின்கண் பயிலப்பெற்றிருக்கின்ற சில அடைமொழிகளின் அமைதியைச் சிறிது கருதலாம்.

# சூரியன்

## I. கதிரவன் ஒளி (தன்மையும் பயனும்)

“ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்
காவிரி நாடன் திகிரிபோல் பொற்கோட்டு
மேரு வலந்திரித லான்.” —சிலப்பதிகாரம்.

ஞாயிறு:-இந்நிலவுலகில், ஞாயிறு ஒன்றே, முதன்மை பெற்றும், மேன்மையுற்றும், சிறந்து விளங்குகிறது. அனைத்திற்கும் அடிப்படையான இதனை அனைவரும் கொண்டாடிவருகின்றனர். எத் தேசத்தினர் ஆயினும் சரி, எம்மதத்தினராயினும் சரி, எத்தொழில ராயினும் சரி,எத்தன்மையராயினும் சரி, ஞாயிறைக் கண்டு களிக்காதவரில்லை. நீரற்ற கடுங்கானலில் நெருப்பெனக் கொழுந்துவிடும் முதுவேனிற் கொடுமையில், தீய்ந்து வருந்துவோரும், வருந்தும் அச்சமயத்தில் பகலவனைப் பழிப்பாராயினும், சில நாட்கள் வரையில் சூரியவெளிச்சமே இல்லாது இருண்டுபோகும்படி விடாமழை பெய்யுமாயின், ‘எப்போது கதிரவனைக் காண்போம்’ என்றே ஏங்கிக்கிடப்பர். எனவே, ஆதித்தனது ஆட்சி அதிகரித்த நமது உஷ்ணப் பிரதேசங்களிலும், அவனைக் கொடுங்கோலன் என்பார் இலர். வேனிற்காலம் வரும்போது, பொறுக்க முடியாத சூட்டால் வாடிவதங்கும் நம் நாடு, ஏனைய காலங்களை இதனாலேயே இனிதாக அனுபவிக்க நேர்கின்றது. இதனாலன்றோ, வேனிற்காலம் சென்றதும் ‘மழைவரும்’ என்னத் திண்ணமாய் எதிர்பார்க்கின்றோம். இம்மழையால் தேகசுகமும், பயிர் விளைவும், உண்டாகின்றன. இவைகளன்றியும்,வாணிகத்திற்கு இன்றியமையாத மந்தமாருதமும், குளிர்ந்தவாடையும் பருவக் காற்றுக்களாய் வீசிக் கடற்பிரயாணத்திற்கு உதவிசெய்கின்றன.

ஞாயிறு போற்றுதும்:—நமதுநாட்டில், சூரிய நமஸ்காரம் என்பது ஒரு வைதிகச்சடங்காய் வழங்கிவருகின்றது. “கண் கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம்” என்று ஒருபழமொழியும் உண்டு. அதற்கேற்றவாறு,

கண்ணிலே பூ விழுந்ததால் கண் தெரியாமல் வருந்துகிற முதியோரும் நோயாளரும், காலையிலும் மாலையிலும் சூரியவழிபாடு செய்வதை நாம் பார்க்கின்றோம். சிலருக்கேனும், அதனால் குணம் நேர்ந்திராவிடில் அந்தப் பழக்கம் தொன்றுதொட்டு இன்றுவரை வழங்கி வருவது அரிதாம். மேல்நாட்டு வைத்திய சாஸ்திரிகளும், சூரிய ஒளியால் பல நோய்களுக்குச் சிகிச்சை செய்யலாம் என நிரூபிக்கின்றனர். நமது நாட்டினிலுள்ள சித்தவைத்யமும் ஆயுர்வேதமும் சூரியபுடத்தால் மருந்துகளைத் திட்டம்செய்வதே நல்ல முறையெனக் கையாளுகின்றன. ஆகையால், வெப்ப மிக்க இந்நாட்டிலு ஞாயிறை நாம் உள்ளன்புடன்போற்றுகின்றோம். கதிரவனே, நாம் உண்ணும் உணவுப்பொருள்களான பயிர்களின் வளப்பத்திற்கு மூலாதார காரணமாய் நிற்கிறான் என்பது நாட்டுப்புறமாந்தரும் நன்கறிந்த தொன்றாம்.

சூரியோதயம்:—சூரியோதயம், நமதுநாட்டில் எல்லாக்கவிகளாலும் வியந்துபாடப்பட்டதாகும். இதன் இயற்கையழகைத் தொண்டரடிப்பொடி யாழ்வார்,

கதிரவன் குணதிசைச் சிகரம்வந் தணைந்தான்
கனையிரு ளகன்றது காலையம் பொழுதாய்
மதுவிரிந் தொழுகின மாமலர் எல்லாம்

என்றும்,

கொழுங்கொடி முல்லையின் கொழுமல ரணவிக்
கூர்ந்தது குணதிசை மாருதம் இதுவோ
எழுந்தன மலரணைப் பள்ளிகொள் ளன்னம்
ஈன்பனி நனைந்ததம் இருஞ்சிற குதறி

என்றும்,

சுடரொளி பரந்தன சூழ்திசை யெல்லாம்
துன்னிய தாரகை மின்னொளி சுருங்கிப்
படரொளி பசுத்தனன் பனிமதி இவனோ

என்றும், பாடியிருப்பதைக் காண்க. சூரியன்உதித்தவுடன், தாமரை மலர்வதும், குயில் கோழி முதலிய பறவைகள் கூவுவதும், வண்டுகள் முரல்வதும், பற்பல தொழிலாளர்களும் தத்தம் காரியங்களுக்குச் செல்லுவதும், வியக்கத்தக்க காட்சியன்றோ? ஆயினும், தினந்தோறும் நாம் அவற்றைக் காண்பதால் அவற்றின் இயற்கையழகை யுணர்ந்து களிப்பதில்லை. எனினும், இரவியின் மணிநெடுந்தேர், வேண்டாதவர்க்கும் வேண்டியஅளவு நன்மைபயக்கும் தன்மையுடையதாகும்.

சௌர மதம்:—நமது நாட்டில் சூரியனையே கடவுள் என்று வழிபடும்கொள்கையர்பலர் இருந்தனர் அவ்வாறு இயற்கைப் பொருளைக் கடவுள் என வழிபடலாகாது என்று சைவ சமயாசாரிகள் பலநூற்றாண்டுகளுக்கு முன்னரே கண்டிக்கலாயினர்.

அங்கதிரோனவனையண்ணலாக்கருதவேண்டா
வெங்கதிரோன்வழியேபோவதற்கமைந்துகொண்மின்
அங்கதிரோனவனையுடன்வைத்தஆதிமூர்த்தி
செங்கதிரோன் வணங்குந்திருச்சோற்றுத்துறையனாரே.

என்றுவரும் அப்பர் தேவாரப் பாசுரத்தால் இதனை உணரலாம். இதனாலும், ஆரியத்தில் சூரிய புராணம் எனவொரு புராணம் ஏற்பட்டிருப்பதனாலும், இயற்கையில் அளவற்ற சக்திபெற்ற இந்த நெருப்புக் கோளத்தை இறைவனேயென்று மனிதர் கொண்டாடிய பழைய நிலைமை வெளியாகின்றது.

மேரு வலந் திரிதல்: சம சீதோஷ்ண ப்ரதேசம்:

(i) குளிர்காலம்—இனி, சூரியன் மேருமலையை வட்டமிட்டு வருகின்றான் எனக் கவிகள் நமது நாட்டில் பாடுகின்ற கற்பனையை ஆராய்வோம். நமது தேசத்தில் சூரியன் கிழக்கில் உதிப்பதும், நமது உச்சிக்கு நேராய் ஓடுவதும், மேற்கில் ஒளிப்பதுமாகத் தினந்தோறும் திரிகின்றானன்றோ? இப் பரதகண்டத்தை விட்டு, இமயமலைக்கு வடக்கிலுள்ள தேசங்களுக்குச் செல்வோமாயின், சூரியனைக் கிழக்கில் உதிக்கவும் மேற்கில் அஸ்தமிக்கவும் நாம் காண்பதில்லை. தென்கிழக்கில்உதித்து, தென்மேற்கில் அஸ்தமிப்பதே பெரும்பாலும் சூரியனுடைய வழக்கமாக இருப்பதைக் காணலாவோம். இஃதன்றியும், சில காலங்களில் சூரியோதயம் காலையில் பத்துமணிக்கும், சூரியஅஸ்தமனம் பகல் இரண்டுமணிக்கும், நேர்வது நமக்குமிகவும் அதிசயமாக இருக்கும். அஃது அத்தேசத்தில் குளிர்காலமாகும். எங்கும் பனி உறைந்துகிடக்கும். பல்லைக்கிட்டும் குளிர் வாடை தேகத்திலுள்ள நரம்புகளையும் குலையையும் நடுங்கச் செய்திடும். இக்காலத்தில் எழும் கதிரவனும் அத்தேசமாந்தருடன் துன்புறுபவன் போல் காணப்படுவான். இத்தன்மை,

மொய்பனிகூர் குளிர்வாடை முழுதுலவும்
பொழுதேயாய்க்
கொய்தளிர்மென் சோலைகளுங் குலைந்தசையக்
குளிர்க்கொதுங்கி
வெய்யவனுங் கரம்நிமிர்க்க மாட்டான்போல்
விசும்பினிடை
ஐதுவெயில் விரிப்பதுவும் அடக்குவதும்
ஆகுமால்

என்று சேக்கிழார் கூறுவதுபோலவே விளங்குகின்ற இத்தகைய பிரதேசங்களைச் சமசீதோஷ்ணப் பிரதேசங்களென்று பூகோள சாஸ்திரிகள் கூறுவர்.

ii. கோடை:—நமது பிரதேசமோ, மாரிக்காலத்திலு முஷ்ணப்பிரதேசமே. சமசீதோஷ்ணப் பிரதேச நாடுகளிலும், மாரிக்காலத்தில் குளிர்ச்சி அதிகரித்தும், வேனிற்காலத்தில் சூடுஅதிகரித்தும் இருத்தல் வேண்டு மன்றோ? ஆனால், சூடு அவ்வாறு அதிகரித்தாலும், நம்மவர்க்கு அது அங்குத் தோன்றாது. அந்நாட்டாரோ அக் கோடைக்காலத்தை உஷ்ணமென்றே கருதுவர். ஆயினும், அந்தநாட்டுக் கோடையின் வெப்பம் நமது மாரியின் குளிர்ச்சியைவிடக் குளிர்ந்திருக்கிறதென்றே நாம்கூறவேண்டும். அந்நாடுகளில் வசந்தகாலத்து இறுதியில், சூரியோதயம் காலை நாலு மணிக்கு நிகழும், அஸ்தமனம் மாலைஎட்டுமணிக்கு நேரலாகும். இங்கே இரண்ணிய வேளையிற் போல, அங்கே, இரவெல்லாம், ஆதித்தப் பின்னொளியும் அழகிய மின்னொளியும் வானம் எங்கும் நிறைந்து விளங்குவதை நாம் காணலாம். இத்தேசத்தார் வெய்யிலில் செல்ல அஞ்சார், பறவைகள் போல வெய்யி

லில் குளிர்காய்வார். ஆதலால், இந்தச் சமசீதோஷ்ணப் பிரதேசங்களில், கோடையிலும் பகலவன் ஒளியும் வெய்யிலும் கடுமையாகஇருப்பதில்லை. ஆயினும் அத்தேசத்தில் உள்ள சிலருக்குக் கோடை வெப்பத்தால் வரும் சூரியமூர்ச்சை (Sun stroke) என்னும் ஒரு வகைச் சுரம் காண்பதுண்டு. இது தவிர, வேறு துன்பம் வெயிலால் அங்கு நேர்வதில்லை.

iii. மாரிக்காலம்:—இப்பிரதேசங்களில்நமதுநாட்டைப்போல் மாரிக்காலத்தில் எவ்வகையானபயிரும் விளையாது. மாரிக்காலம்வருவதற்குமுன்னரே மாரிப்பச்சை என்னும் மரம் (Winter green tree) நீங்கலாக, மற்றைய செடி மரம் கொடிகளின் இலைகள் எல்லாம் உதிர்ந்துவிடும். பின்னர் மழைக்காலத்தில் எங்கும் பனிநிறைந்துஉறைந்து வெள்ளைத்துப்பட்டி விரித்தாற்போல ஒரே வெண்மையாகத் தோன்றும்.

iv. வசந்த காலம்:—வசந்த காலம் ஆரம்பித்தவுடன் பனிக்கட்டிகள் கரைந்துபோகிப் புல் பூண்டுகள் தலையெடுத்துக் காட்டும். பிறகு செடிகள் தளிர்விட்டுப் பூத்துக்காய்க்கும். கோடைக்காலத்தினிறுதியில் பெரும்பாலும் அறுவடை முடிந்துவிடும். இக்காலத்திலே, மனிதர்களும் பறவைகளும் பின்வரும் மாரிக்காலத்திற்கு இரைதேடிச் சேகரித்துவைப்பது, முதுமைப் பருவத்தில் உதவவேண்டி இளமைப் பருவத்திலேயே மக்கள் பொருள்சேர்த்து வைப்பதை ஒக்கும் என்ன அந்நாட்டுக் கவிவாணர்கள் வர்ணிப்பர். எனவே ஒவ்வொருவருடத்திலும் இந்தப்பிரதேசங்களில் ஆறு அல்லது எட்டு மாதமே மனிதருக்குப் பயன்படும். ஏனைய காலமோ பனியால்நனைந்து குளிரால் நடுங்கி ஜீவராசிகள் துன்புறும் காலமேயாம்.

---

# வில்லிபாரதம்

## இராசராசன்—துரியோதனன்

[45-வது பக்கத் தொடர்ச்சி]

ஆனால் கண்ணன் இவ்வாறு மௌனமாக வெளியேறியதுதான் துரியோதனனுக்கு அளவற்ற கோபத்தையும் சந்தேகத்தையும் தூண்டிற்று. நமது வசைக்கெல்லாம் கலக்கம் உறாமல் ஒருவன் எதிரே நின்று சிரிப்பானாயி னவனிடத்து நமக்குச் சினமும் ஐயமும் மிகுவதுஇயற்கை. சுயோதனனுக்கும் அன்னவாறே கண்ணனிடம் கோபம்மிகுந்தது. ஆயினும், கண்ணன்பால் செலுத்தமாட்டாத் தன் சினத்தையும் சங்கையையும் விதுரன்மீது திருப்பிவிட்டான். கண்ணன் இதனையே எதிர்பார்த்திருந்தார். அரசியல் செருக்கென்னும் ஒரு போதை (திமிர்) மண்டைக்கேறிய அவனது நிலைமையை

பேர ரானிருபன் மணிநெடும் சுடிகை
    ஆயி ரங்கொடு பொறுத்தபார்
வீர ரானவ ரதல்லவோ உரிமை
    வேண்டு மோவென விளம்பினான்

என்னுமச் சொற்கள் விளக்கின. ஆதலின் அப்போதையைக் கலைக்காமல் மௌனமாக வெளியேறினால்தான் அவனது சினமும் ஐயமும் மிகக்கிளர்ந்ததும், அவன் தான் கூறுவ தின்னதெனஉணராமல் வைது விதுரனை யெளிதில் பகையாக்கிக் கொள்வானென்று அவர் நினைத்தார். மற்று, 'நீ ஆள்கின்ற விதம் நான் பார்க்கிறேன்' என்று அவர் அச்சுறுத்தியிருந்தால், சுயோதனன் விவேகசாலியாதலின் உடனே சுயநிலையடைந்து விதுரனைப் பகைத்துக்கொள்ளுமுன் தன் செய்கையை ஆராய்ந்திருப்பான். அதற் கிடமின்றி, கண்ணபிரான் அவன் மயக்கத்தைக் கலைக்காமலே அகன்றன ராதலின் அந்நிலையில் அவனது விவேகம் துயில்போக,அவன் தனது அத்துணைப் பெரியவீரர்களிருக்க, தன்னை எதிர்த்து மதிகூறும் இவ்விதுரன் தனக்குஅடங்காத வீரனாதலின்அவனில்லாமல் தன் கைக்கடங்கிய மற்றைவீரர்களைக் கொண்டே இப்பாரதப் போர் நிகழ்த்தலாமென்றும், ஒருவேளை, இவ்விதுரன் கண்ணனால் பேதிக்கப்பட்டிருக்கலா மாதலால் வசைகள் ஏவிச் சோதித்து அவன் எந்நிலையிலிருக்கின்றானென்பதைக் காணலாமென்றும் நினைத்துத்தான்,

கரிந்து மாலை சருகாக வும்புதிய
    கமல வாண்முகம் வியர்க்கவும்
திருந்து கண்ணிணை சிவக்கவும் கொடிய
    செய்ய வாயிதழ் துடிக்கவும்
இருந்த பேரவை யினெடிது யிர்த்திடு
    ராச ராசன வனுக்கிவன்
விருந்து செய்தவுற வென்கொல் என்றரசர்
    எதிர்வி துரனை விளம்புவான்.

சற்று நில்லுங்கள். இத்தனை நேரம் இவன் பேசியதைக் கூர்ந்து கவனித்தோம்;இனி இம்மன்னவனது தோற்றத்தைக் காணலாம்:கண்டு நமக்குத் தோன்றுவதைச் சொல்லிக்கொள்வோம். இவன் அழகு மிக்குடையவன்என்பதில்ஐயமில்லை. திருந்திய முகமும் கண்ணும் வாயும் கொண்டுளன். கிரீடியை வெகு அழகனென்று கூறுவதுண்டு. மற்று, சுயோதனனும் மிக அழகுடையவன் என்பதைக் கவிஞர் பன்முறை கூறியிருக்கின்றார். தனது பாம்பனைய அழகினால் அவன் பிறரை எப்படி வசீகரம் செய்கிறான் என்பதைப் பின்னால் கருதுவோம். அவனைப் போன்ற இராசதந்திரிகளுக்கு பிறரை வசீகரம் செய்ய, தேக சௌந்தரியமும் துணையாகும். *அவ் வருணனையைக் கூர்ந்து நோக்குமின்.

'புதிய கமல வாண்முகம் வியர்க்கவும்' என்றார். எப்போதும் புதிய கமல வாண்முகமாதலின், அது வியர்ப்பதுகோபத்தாலன்றிக் காதலால் வியர்ப்பதொன்றன்று. இராவணனைப்போல் மாளிகையின் பரணிக்கூட்டில் தனித்திருந்து மோகத்தால் அகமும் உட

---

* மாகாண கவர்னர் ஒருவரை, 'நீங்கள் இம்மந்திரிகளை எம்முறைகொண்டு தேர்ந்தெடுத்தீர்?' என்று அவரது நண்பர் கேட்க, கவர்னரவர்கள் 'நான் அவர்களை அவர்களது வசீகரத் தோற்றத்திற்காகவே தேர்ந்தெடுத்தேன்' என்று கூறினாராம். இதில் உண்மை எவ்வளவு பாகமானாலும், இதைப்போன்றவொரு கருத்து, கொள்ளப்படுவதொன் றன்றோ?

னும் புழுங்கும் காட்சி இங்கில்லை. மற்று, ஓதி உணர்ந்ததன் பயனும், ஞானம் உதயமாகும்போது உடல் வியர்க்கும் காட்சியுமன்று. அம்முகம் வியர்வை தங்கியதாயிருந்தாலும், அக்கண்கள் ஆழ்ந்தனவாயிருப்பினும், கூரிய சீரிய தீவிர ஒளிவீசும் கண்கள் அவை. மற்று, சுயோதனனது விழிகள் திருந்திய கண்ணிணைகளாதலின், அவை இராவணனது கண்களைப்போல், காதற்கோ, அல்லது பெரியதோர் விசாரத்திற்கோ இரவுபகலாக விழித்து அழுந்திய கண்களல்ல. 'கொடிய செய்ய வாயிதழ்' என்று வாயி னிலக்கணத்தைக் கூறிவிட்டார்.

இவன் எண்ணியபடியே, விதுரனும் தன் வில்லை யொடித்து நிற்த, அம்மட்டில்இவ்வாறுஅவன் தனி நின்றனனே என்று இராசராசன் உண்மையில் ஆறுதலடைந்தான். மெய்யாகவே சுயோதனன் அவனைத் தனக்கொரு புண்ணெனவும் கருதினான். அதற்குக் காரணம், மற்றைச் சபையோர்கள் அனைவரும் தனக்கடங்கி நிற்க, இவ்விதுரனொருவனே தன்னை எதிர்த்தொரு மதிகூறும் வன்மையுடையோனா யிருந்தான். மிகவும் விவேகமுடையனாயினும் 'கசக்கும்' நன்மதி கூறுகின்ற அமைச்சனை எவ்வரசனும் கொண்டாட மாட்டானென்பது உண்மை. பிரான்ஸ் தேசத்தில் பதினைகாம் நூற்றாண்டில் ஆட்சிசெய்த பதினொன்றாம் லூயியைப் பற்றி, ஸர் வால்டர் ஸ்காட் எழுதிய குவெண்டின் டர்வர்ட் என்னும் நாவலில் இதனைக் காணலாம். அவ்வரசனுக்குப் பலவகையினும் உழைப்பதன்றி இச்சகம் பேசிக் களிப்பூமூட்டுந் திறனில்லாத டியூனாய் ஆர்லியன்ஸ் என்போர் அவனதுகொடுமைக்கும் வெறுப்பிற்குமே ஆளாகிநிற்க, தனக்கு க்ஷவரம் செய்யும் நாவிதனிடத்தே அம்மன்னன் தனது இரகசியங்களையும் சூழ்ச்சிகளையும் ஒப்படைக்கலாயினான். ஆதலின் தனது சபையில் தன் முன் நின்று தனக்கு மதிகூறுகின்ற விதுரனிடத்துத் துரியோதனன் வெறுப்புமிக்கது புதுமையன்று. அவனது சபையில், துரோணன் ஒரோவிடத்துச் சிறிது மதி கூறுவதல்லது, மந்திரி பதவி வகிக்கவல்ல அந்தணனாயிருந்தும், மிகுதியாகப்பேசுகின்றிலன். வீடுமன் சுயோதனனை எதிர்த்து மதிகூறவும் அஞ்சுவதல்லாமல் அவனுக்காக எச்செயலும் புரியத் தீர்மானித்துள்ளான். கன்னனைப்பற்றி மிகுதியாகக் கூறவேண்டியதில்லை. அரசனுக்கு அவன்மனம் போனவண்ணமெல்லாம் மதி கூறும் இயல்பினன் அவன். இவன் பகைவரிடமிருந்து வயப்படுத்திய சல்லியனும் இவனுக்கு எதிர்த்து மதி கூறாமல் இன்சொல் பயில்பவனாதலின், சுயோதனன் அவனை நம்பினனேயொழிய, தன்னைப்பற்றி ஒரு நற்சொல்லேனும்இயம்பாத விதுரனைப் பகைவனாகவே கருதினான். இன்னவாறாகத் தனக்கு அடங்கியவர் இத்தனைபேர் இருக்க, இவர்களைக்கொண்டே தனது பெரிய ஆட்டத்தை ஆடிவிடாமல், எப்போதும் தனது மனவமைதியைக் கலைக்கும் இவ்விதுரனைத் தன் சேனையில் வைத்துக்கொண்டென்ன பயன், என்று எண்ணினான் இராசராசன். அவ்வாறெண்ணியதும் எதிர்ப்பென்பதைப்பொறாக் கலாற்றாத அவனது அவ்வணங்காமுடியுடைமையே.

ஆயினும், 'அவ் வணங்கா முடியுடைமை' யென்பது அரசியலில் பேதமையாமென்பதைக் கண்ணன் முன்னால் குறிப்பாக உணர்த்தியதைக் கண்டோம். அவ்வாறு கண்ணன் கூறியதற்குச் சரித்திரச் சான்றும் உண்டு. இவ்விஷயத்தில், இரண்டாம் ஜார்ஜ் மன்னரின் முதன்மந்திரியாகியவால்போலுக்கும் (Walpole) சுயோதனனுக்கும், (ஒரு சரித்திரபுருஷனுக்கும் ஒரு கதாநாயகனுக்கும் எத்தனை வகைகளில் ஒற்றுமை இருக்கக்கூடுமோ அத்தகைய) ஒற்றுமையுளது. வால்போலை முதல்மந்திரி யாக்கியதும், அரசன் அவனைத் தனக்கு உதவியாக மந்திரி சபையும் தேர்ந்தெடுத்துக் கொள்ள உத்தரவிட்டான். அந்நாள்வரையில் அவனது அருமை நண்பனும், அவன்பக்கத்தில் அரசியல் போர்கள்பலபுரிந்தவனும் ஆகிய பல்டினி (William Pulteney) அவனிடம் சென்று காபினட் சபையில் தனக்குஇடம்கேட்டான். வால்போலுக்குப் பல வகையிலும் துணையாயிருந்து, கல்வி கேள்விகளில் மிக்கவனும், அரசியலில் போராற்றல் உள்ளவனும், வாது செய்வதில் சமர்த்தனுமான பல்டினியைவிட, வேறு ஒருவரும் வால்போலது நன்மதிப்புக்கு உரியவரல்லர். ஆனால் ஒரு மந்திரி சபையில் அரசியல் போராற்றலில் தன்னை நிகர்த்த பல்டினிக்கும் தனக்கும் ஆகிய இருவருக் கிடமில்லை யென்றுகூறி வால்போல் பல்டினியை எதிர்க்கட்சிக்குத் துரத்தலானான். சிறிது காலம் சென்ற பின்னர் அவன் ஒரு மசோதாவைக் கொண்டுவந்தான். நாட்டில் அதற்குப் பலத்த எதிர்ப்பிருந்தது. தனது மந்திரி சபையிலும் சிறிது எதிர்ப்பிருந்தது. மகா தந்திரியாகிய வால்போல் அப்போது யாதுசெய்தானெனின், சுயோதனன் அப்பொழுது யாது செய்திருப்பானோ அதனையே செய்தானென்னலாம். நாட்டில் அதற்குப் பலமான எதிர்ப்பாதலின் அம்மசோதாவை நிறைவேற்றுவதில் பயனில்லை யென்பதுகண்டு அதை ரத்துசெய்தான். ஆனால் அத்துடன் நிற்கவில்லை. தன்னைஎதிர்த்து மதிகூறுந்துணிவுவாய்ந்திருந்தனர்க ளல்லரோ செஸ்டர்பீல்டு (Chesterfield) முதலிய தனது துணை மந்திரிமார்கள்? சற்றேனும் காலதாமதமின்றி அவர்களையன்றே பதவியிழக்கச் செய்து, தன் வார்த்தைகளை வேதமொழியாகக் கொள்ளும் சிலரைத் தனக்குத் துணையா யமர்த்திக் கொண்டு, பலவித ஆற்றல்கள்வாய்ந்த எதிரிகளுடன் சளைக்காமல் பலகாலம் நின்று சமராடினான். ஆனால் இத்தகைய போராட்டம், சமாதான காலங்களிலே அவனுக்கு வெற்றியாக முடிந்ததெனினும், யுத்தம் தொடங்கியவுடன் பெரிய பிரச்சினைகள் நேர்ந்தபடியால் அவனது திட்டங்கள் ஒன்றும் பயன்படவில்லை. அவனுக் கடங்கிநடந்த மந்திரிகளே சூழ்ச்சிகள் செய்ய அவன் சடுதியில் பதவியை யிழக்கவும், அவன் தலைக்கே கேடுவரவும் நேர்ந்தன. அதிட்ட வசமாகத் தலைதப்பினனேயன்றி உண்மையில்அவன் வாழ்க்கையும் துரியோதனது வாழ்க்கையைப்போல் தோல்வியுடன்மடிந்திருக்கவேண்டியதொன்றேயாம். வால்போல் நீங்கியபின் முதன்மந்திரியான ஹென்றி பெல்ஹாம் முன்னவனதுஅரசியல்திட்டத்திலுள்ள வணங்காத் தன்மை என்னுமச் சொல்லைத் தன் அக

ராதியினின்றும் நீக்கி, மற்றைப்படி அவனது முறைகளைக் கைக்கொண்டனன். அவன் பார்லிமெண்டில் தனக்கெதிராகப்பேசக்கூடியவரோ அல்லது ஏதேனுமொன்று விஷமம் செய்யக்கூடியவரோ யாவரேயாயினும் அவர்களுக்குத் தனது மந்திரிசபையில் பதவி கொடுத்து அரசியலை நடத்திச்சென்றான். ஆயினும், அவனது இம்மந்திரிகளும்எப்பொழுதும்வாயடங்கி நின்றாரென்பது இல்லை. 'அவர்கள் எதுபேசினும் நம் பக்கலில் இருந்து நம்மையே இகழ்ந்து பேசட்டும். எதிர்க்கட்சியில் நின்றுஇரவுபகலாகக்கர்ஜிப்பதினும் இதனைப் பொறுத்துக்கொள்வேன்' என்று கூறுவானும் பெல்ஹாம். இத்திட்டம் சரியாகவே வேலைசெய்தது என்றெண்ண இடமிருக்கின்றது. ஏனெனின் பெல்ஹாம் இம்முறைப்படியே தான் சாகுமளவும் பதவியிலிருந்ததல்லாமல் தான் இறந்தபின்னும் தன் தம்பிக்கு நாற்பத்தைந்து வருடகாலம் நீடித்ததோர் பதவியும் பெறவைத்தானெனின், அவ்வாறே எண்ண வேண்டும்.

அரசியல்வாதி அவ் வால்போலைப் பற்றிச் சிறிது விரிவாகக் கூறியது அவர்களிருவருடைய மனப்பான்மையின் ஒற்றுமையையும், அப்பான்மையை அரசியலில் எத்தகைய மதிப்பிடுவார்கள் என்பதையும் காட்டவேயாகும். நிற்க, அதுவொன்றேயல்லாமல், சுயோதனனுக்கு அவனைப் பொறுத்தவரையில் விதுரனிடம் ஐயமேற்பட நியாயம் உண்டு. துரியோதனனது மனப்பான்மையைப் பின்னும் சிறிது ஆராய்வோம். மேலே துரியோதனன் விதுரனை விளம்புவான்,

வன்பி னுலவ னிவௌவ வென்றுகொல்
லென்மனையி லுண்டியை மறுத்தவன்
தன்ப தாகினி யொடினி தருந்தும்வ
கைதன்னி லின்னமு தியற்றினன்
என்பி தாவொடு பிறந்தும் இன்றளவு
மென்கை யோதனம் அருந்தியும்
அன்பு தானுடை யனல்லன் என்பகை
தனக்கு முற்றபகை அல்லவோ ?

என்றதில் விதுரனைப்பற்றி நிஷ்டூரமாகச் சில கூறினனென்றுதெரிகின்றதேயன்றி வசவுத்தொனியொன்றும் அதி லில்லையென்று தோன்றுகிறது. ஆதலின் 'கரிந்து மாலை சருகாகவும், புதிய கமல வாண்முகம் வியர்க்கவும், கண்ணிணை சிவக்கவும், வாயிதழ் துடிக்கவும்' கூற முயன்றதற்கும், இங்கு உண்மையில் கூறியதற்கும் ஒற்றுமையில்லை. ஆயினும், மேல்வருங்கவியமைந்தவண்ணம் காண்க.

முதல்வி ழைந்தொருவ னுடனி யைந்தபொருள்
பற்றி யின்புற முயங்கினும்
அதிக மென்றபொருள் ஒருவன் வேறுதரில்
அவனையே யொழிய அறிவரோ
பொதும டந்தையர் தமக்கு மண்ணிலிது
புதுமை யல்லவவர் புதல்வனும்
விதுர னின்றவனொ டுறவு செய்ததோர்
வியப்பை யென்சொலி வெறுப்பதே.

எனவரும் இந்தப் பாட்டில், அவனது வசவு நன்கு வெளிப்படுகிறது. முதற்பாட்டில், 'என் பிதாவோடு பிறந்தும்அன்புதானுடையனல்லன்' என்றிருப்பதும் இப்பாட்டில், 'பொதுமடந்தையர் புதல்வனும் விதுரன்' என்று அமைந்திருப்பதும், முரணாகத் தோன்றுகின்றதல்லவா ? மற்றுச் சுயோதனனது வாசகங்களோ முரணென்பதே யில்லாமல் இருப்பனவல்ல. மாறுபடக்கூறல் என்ற குற்றம் சிறியோர்கள் அஞ்ச வேண்டிய தொன்றேயன்றித் தன்னைப் போன்றவருக்குஅத்தகைய விதியொன்றுமில்லை என்று நினைத்தவனேயாவன் துரியோதனன். எனினும் முன் பாட்டில் வசவில்லை யென்பதும், பின்னதில் வசவுச்சொற்கள் வெளிப்படையாகநின்றுதோற்றம்செய்கின்றன வென்பதும் மறுக்கவொண்ணாது. ஏன் என்று கேட்டொரு விடை யெழுப்ப முயல்வோம். 'கரிந்துமாலை சருகாகவும், வாயிதழ்துடிக்கவும், கண்கள் சிவக்கவும்' அவனிடம் தோன்றிய அம்மெய்ப்பாடுகள், அவன் வருவித்துக்கொண்டனவேயல்லாது இயற்கையாகத் தோன்றியனவல்ல. அதனாற்றான் அத்தகைய மெய்ப்பாடுகளை எளிதில் தருவித்துக் கொண்டனனேனும், அவற்றிற்கேற்க மொழிகள் அத்துணையெளிதில் வரவில்லை. ஆதலின் சுயோதனன் இங்குக்கூறியது, அச்சமயத்தில் தோன்றிய ஏதோ உணர்ச்சியால் தூண்டப்பட்டு அவன் மொழிந்தானென்றும், அப்பேதமையைநினைத்துப் பின்னால் அவன் வருந்தியிருப்பானென்றும் கருதுவதற்கில்லை. நாம் முன் கூறியபடி அவனுக்கு இதய உணர்ச்சிகள் என்பதே இல்லையாதலின் அவன் உணர்ச்சியால்உந்தப்பட்டு ஏதேனும் ஒன்றும் பதறிக் கூறானென்பதற்கும், ஓர்ந்தே எதனையும் வெளியிடுவானென்பதற்கும் இதுஏற்றசான்றாகும். நிற்க, இங்குத் துரியோதனது கருத்தென்னவெனில், அரக்குமாளிகை இரகசியத்தைப் பாண்டவர்க்கு வெளியிட்டவனும், திருதராட்டிரனது திருமுகத்தின் திருக்கருத்தைப் பாண்டவர்க்குக் கூறினவனும் ஆகிய இவ்விதுரன், உண்மையில் கண்ணால் பேதிக்கப்பட்டிருக்க வேண்டும் என்னும் நினைவே. அவனைப் பொறுத்தவரையில் அவன் அன்னவாறு நினைத்ததும் சரியென்பதற்கு விதுரனது மறுமொழிகளே போதுமே :—

ஈண்ட வர்க்குதவி யாய தூதென
இசைப்ப வற்குலக மெங்கணும்
நீண்ட வர்க்குதவி யாயி னேனென
நினைத்து நீயென்னை யடர்த்தியோ
மாண்ட வர்க்குதவி யான பேரற
முமிசை யுமாண்மையும் வளர்த்திடும்
பாண்ட வர்க்குதவி யாகில் என்னைமுடி
மன்ன ரானவர் பழிப்பரோ

என்று கூறியதில் கடைசியடியை நோக்குமின். செஞ்சோற்றுக்கடன்கழிக்கநின்ற சிலையாசிரியன் பின்னே போரில் பாண்டவர்களுடன் எதிர்த்துப் போர்புரிய மனமில்லாமல், க்ரீடியை அரணுக்குள்ளே போரின்றி விட்டுவிடுகின்றான். ஐயங்கொள்ளற் கேதுவில்லா துரோணனனேபின்னால்இன்னவாறுதிரும்பினானெனின், தனக்கு வெற்றிநிகழ்கின்ற சமயத்தில், பாண்டவர்மீது வைத்தஒருபரிவினால் இவ்விதுரன் பகைவனிடத்துத் துணையாகலா மல்லவோ என்று சுயோதனன் நினைத்ததும் இயற்கையல்லவா? மேலும்'பாண்

டவர்க் குதவிசெய்தால் பழியில்லை' என்று விதுரன் வாய்விட்டுக் கூறியபின் தான் செய்தது தவறென்று சுயோதனனுக்கு எவ்வாறு புலப்படும்? இதனல் விதுரன், சேனையிலிருந்தால், அவ்வாறு ஏதேனும் சதி செய்திருப்பானென்று கூறினே னில்லை. திருதராட்டிரன் உள்ளளவும், விதுரன் அவ்வகையான சதியியற்றுவான் என்று கூறுவதற்கில்லை. முற்றும்வரையில் எவ்வணமேனும் சமரசம் விளைவிக்க முயல்வானன்றி, எதிரிகளுடன் சேர்ந்துகொள்வா னென்று கருதவேண்டா. ஆயினும், சுயோதனனுக்குப் பிறர் நற்குணங்களில் நம்பிக்கை சிறிதேனும் இல்லை. தனது குணங்களுக்குப் புறம்பான குணங்களும் உணர்ச்சிகளும் இவ்வுலகி லில்லை என்பதே, ஆன்ம சிந்தனை என்பதில்லாத அவனுக்கு ஏற்பட்ட கற்பனை. அதனல்தான் அவனது வணங்காமுடியுடைமை சிறிதேனும் பாதிக்கப்படாமல் அவனை வாழ்க்கைமுழுதும் தொடர்ந்து நின்றது.

---

## கம்பராமாயணம்

### கிஷ்கிந்தா காண்டம்—9. கார்காலப் படலம்

[41-வது பக்கத் தொடர்ச்சி]

கற்றோர் சீற்றங் காப்பத னருமை.

இன்னும், மன்மதன் ஒருவன், மரபின்படி, இராமனால் பழிக்கப்படுவதற்கு நிற்கின்றான். அவனை என்ன செய்வது, என்ன சொல்வது, என்று, எவ்வளவு முயன்றாலும், இராமனுக்கு ஒன்றுந் தோன்றவில்லை. பண்டேபோல், சிலேடைகள் தேடினன்; அதுவும் இவனைக் கைவிட்டது. வேறு வகை காணுதவனுகி,

> உண்ணிறைந் துயிர்க்கும் வெம்மை
> யுயிர்சுட வுலைவே னுள்ளம்
> புண்ணுற வாளி தூர்த்தல்
> பழுதினிப் போதி மாரா
> எண்ணுறு கல்வி யுள்ளத்
> திளையவ னின்னே யுன்னைக்
> கண்ணுறு மாயிற் பின்னை
> யாரவன் சீற்றங் காப்பார்

(மன்மதனே, உள்ளிடம் முழுவதும் நிறைந்து வெளிப்பட்டுப் பாய்கின்ற காமத்தீயானது உயிரைச் சுடுவதால் வருந்துகின்ற என் உள்ளம் புண்ணுகும்படிநீ பாணங்களை எய்தல் குற்றமாம். இதனேடு நீ போய்விடு. நினைவு மிக்க கல்வி கற்று அதனை மறவாமல் மனத்தில் வைத்திருக்கும் என்தம்பி இலக்குவன் உன்னைப் பார்த்துவிடுவானுயின், பிறகு அவனதுகோபத்தைத்தடுக்கவல்லவர்யாரிருக்கிறுர்.]

என்னத் தன் தம்பியின் சினத்தைக் கூறி மன்மதனை வெருட்ட நினைத்தான். "எண்ணுறு கல்வியுள்ளத்து இளையவன்" என்று இலக்குவனை இங்குக் குறிக்கும் இது, "கல்வி நிறைந்தவர்களுக்குச் சீற்றமோ அதிகம் வரும்" என்னச் சாதிப்பது போலவே தோன்றுகின்றது. "கல்லாதமூர்க்கர்" என்றுசொல்லக் கேட்டிருக்கின்றோம்; மற்று, கற்று ஆய்ந்து அறிந்து பொங்கும் சீற்றத்தவ ராகுஞ் செய்தியைச்செப்புவது இதுவே முதன்முறை. ஆதலின் இளையவனுக்குவாய்த்த இவ் வடைமொழிகள் கல்வியின் பெருமையைக் கோபத்தின் கைகளில் காட்டிக்கொடுத்துவிடுகின்றன. ஒருகால், கல்வியுடையவர்கள் குணமுடையவர்களுமாயிருப்பாராதலின், குணமென்னுங் குன்றேறி நின்றார் வெகுளி கணமேனும் காத்த லருமையாவதை, அத்திருக்குறளிற்குப் பரிமேலழகர் வகுத்துள உரையினை மனத்தில் வைத்து இங்ஙனம் பேசினுனே இவ்விராமன் என்று ஐயுறலாம். எனினும், அப் பரிமேலழகருக்கு மாறுகக் கம்பர், "குணமுடையவர் வெகுளி கொள்ளார்; கொண்டாரேனும் அது இறையேனுந் தங்காமலுடனே ஆறிவிடும்" $ என முன்னர்க் குறிப்புணர்த்திய செம்மையை இராகவன் மறந்துபோயினன் என்று எண்ணுதலும் நேரிதன்று. முன்னைய பாசுரங்களிற் போல், சீற்றங்கொண்டு செய்ய நினைத்ததெல்லாம், ஒரு சிலேடையை யமைத்துச் செலுத்திவிடுவதே யல்லாமல், அதனினும் பெரியதோர் தீங்கு எவரும் கருதவில்லையாதலின், "ஏ, மன்மதனே, உன் பேரைக்கொண்டு ஒரு சிலேடை இழைக்க இப்பொழுது என்னல் இயலவில்லை; என் தம்பியோ, கற்றுள கல்வியைமறவாமல்தன் மனத்தில் வைத்திருப்பவன். ஆதலின் அவன் உன்னைக் கண்டுவிட்டால், உடனே, ஏதேனும் சிலேடை கற்பித்து ஏவிவிடுவான் காண். அதனை நீ தாங்கலரிது; ஓடிப்போ" என்னுங் கருத்தே உளதென்பதை உணர்ந்தால் பின் ஒருவரும், அவ் வடைமொழிகளின்அமைதியை அயிர்க்கமாட்டார். இதற்கிடையில் இராமனுக்கே தன் கல்வி கைவந்துவிட்டதென்ன,

> வில்லும்வெங் கணையும் வீரர்
> வெஞ்சமத் தஞ்சி னர்மேல்
> புல்லுக வல்ல வாற்றல்
> போற்றலர் குறித்தல் போலாம்
> அல்லுநன் பகலு நீங்கா
> யனங்கவீ யருளிற் றீர்ந்தாய்
> செல்லுமென் றெளிவர் தேமைச்
> செயலுறுஞ் சீர்மைத் தாமே

[வில்லும் கொடிய அம்பும், கொடிய போரில்அஞ்சின வீரர்களின்மேல் எய்யத்தகுவன வல்ல. தன் வலிமையை மதிக்காதவராய் எதிர்க்கின்றவர்களையே குறித்து எய்தல் வேண்டும்; அவ்வாறு இருக்க, ஏ அநங்கனே, நீ அருளையும் விட்டவனுனய். இரவும் பகலும் நீங்காமல், எளியவராகிய எம்மிடத்து உன்வலிமை செல்லும்என்று கருதி இவ்வாறு செய்தல், உன் புகழுக்கு உரியதாகுமோ]

என, "ஏ, அங்கந் தீர்ந்தாய், அருளுந் தீர்ந்தாயோ" என்னுமளவே இவன் கற்பனைசெய்ய இயல்வதாவதைக்கண்டு இனி யாதும் முயல்வதிற் பயனில்லை என்பது தெரிந்துகொண்டு இதனுடன் இராமன் ஓய்ந்துவிட்டான். இராமனுக்குங் கார்கலம், கம்பருக்கும் இது விடுமுறைநாட்கள்—இவைகளினும் சிறப்பான பாசுரங்கள் இச்சமயம் இல்லாமை வியப்பன்று.

இதுகாறும் வாளாவிருந்தனன் இலக்குவன். ஆயினும், அரசினை இழப்பித்த கைகேசியைச் சினந்து,

$ இவ்விடயத்தின் விரிவை 1928-வது வருடத்திய வால்யூம், 640 வது பக்கத்திற் காணலாம்.

'பெண்ணாட்டமொட்டேன் இனி இப்பேருலகத்தி' லென்றும், படையொடு கானகம்நண்ணிய பரதனை மிக வெருண்டு, "புரஞ்சுடு மொருவனிற் பொலிவன் யான்" என்றும் தழங்கு சீற்றத்தனாய்த் தான் தோன்றியபோதெல்லாந் தன்னைத் தணித்துஅடக்கிய இவ்வண்ணான், இன்று அச்சீற்றத்தையே துணைகொள்ள வேண்டுகின்றான் என்னின் இனிச் சும்மாவிருப்பது அழகு அன்றென்று உணர்ந்து,

என்னவித் தகைய பன்னி
யீடழிந் திரங்கு கின்ற
தன்னையொப் பானை நோக்கித்
தகையழிந் தயர்ந்த தம்பி
நின்னையெத் தகைமை யாக
நினைந்தனை நெடியோ யென்னாச்
சென்னியிற் சுமந்த கையன்
தேற்றுவான் செப்ப லுற்றான்

[அத்தகைய உரைகளைச் சொல்லிச் சொல்லி வலிமையழிந்து விதனப்படுகின்ற, தனக்குத் தானே ஒப்பானவனாகிய இராமனைப்பார்த்து, தன்தன்மைஅழிந்து தளர்ந்த தம்பியாகிய இலக்குமணன், "உன்னை நீ எத்தகையவன் என்று நினைத்துக்கொள்ளத் தலைப்பட்டுவிட்டாய், பெரியோய்" என்று, தலைமேல் வைத்த கையினனாய், இராகவனைத்தேற்றும்பொருட்டுச் சில சொல்லத்தொடங்கினான்]

'தனக்குவமை இல்லாதான்' என்னும் அவ்வெதிர்மறை இலக்கணத்தையே, "தன்னையே ஒப்பவன்" என்று உடன்பாட்டு வகையில் சாதித்து இராமனது பரத்துவத்தைக் கம்பர் வெளிப்படுத்துவது இந்நூலின்கண் இது முதன்முறையன்று. இப்புலம்பலுக்கு முதலில் 'வானவன்' என்றும், இறுதியில் 'தன்னையொப்பவன்' என்றும் இராமனைக் குறித்து எல்லைக்கல் நாட்டியிருக்குமிது எண்ணரிய நுண்மை வாய்ந்தது. அன்னவனை நோக்கி, "நின்னை எத்தகைமையாக நினைந்தனை" என்ற இலக்குமணன், அச்சொற்களுள் தோன்றும் பொருளினும் அதிகம் ஆழ்ந்து,

கால நீளிது காரு மாரியும்
வந்த தென்றக வற்சியோ
நீல மேனிய ரக்கர் வீரநி
னைந்த மூங்கிய நேர்மையோ
வாலி சேனைம டந்தை வைகிட
நாட வாரலி லாமையோ
சாலு நல்லுணர் கேள்வி வீரத
ளர்ந்த தென்னைத வத்தினோய்

[நல்ல உணர்வுமிக்க கேள்வியறிவையும் உடைய வீரனே, தவ ஒழுக்கத்தைப் பூண்டிருப்பவனே, சீதையைப் பிரிந்திருக்கின்ற காலமானது நீள்கின்றதென்றும், கார்காலமும் மழையும் வந்ததென்றும் கவல்கின்றாயோ. கரிய நிறமுடைய அவ்வரக்கர்களின் ஆற்றலை நினைத்து மனம் ஒடுங்குகின்ற தன்மையன் ஆகின்றாயோ; சீதை இருக்கும் இடத்தைத் தேடுவதற்கு வாலியின் சேனை இன்னும் வரவில்லையே யென்றோ—நீ இவ்வாறு தளர்ச்சியடைவதற்கு என்ன காரணம்]

என்றுகேட்கின்றான். தயரதன்புதல்வர் நால்வரினும் கம்பர், இராமனை நினைக்குந்தோறும் உள்ளம் உருகி ஆராதிப்பார், பரதனைத் தம் மனமாரப் புகழ்வார், சத்துருக்கனை—மறப்பார்; மற்று அருமையுடனிவர் எங்கும் பாராட்டுவது இலக்குமணனையே. கள்ளமில் இவன் வெள்ளைமனம் எவ்விடத்தும் இவனது அருமையை ஏந்தித் தருகின்றது. "எண்ணுறு கல்வியுள்ளத் திளையவன்" என்று இராமன் தன்னைக் குறித்தது கேட்டானிவன்; இதனால் தன தண்ணன் தனக்குப் போதியகல்வி யில்லையெனக் குறைகொண்டு வருந்தினனென இவ்விலக்குவன்மதிக்கலுற்றான். "கல்வியிற் குறைந்தவன் தான்" என்று இராமபிரானேஎண்ணிக்கொள்வானாயின், அதுஉண்மையாகவும் இருத்தல்வேண்டுமென்று கருதினான் இளையோன். கருதி, இக்குறையினைத் தனதண்ணன் மறக்கும்படி செய்ய வேண்டுமென்று விரைந்தானென, "சாலு நல்லுணர் கேள்விவீர" என்ன அவனை அழைக்கலுற்றான். 'வீரனே, நீ கற்றிலையாயின் என், கேள்வியுடையை, அது சாலும்" என்னத் தேற்றுந்தன்மை இவ்வாசகத்தினுள் அடங்கியிருக்கிறது. "கற்றிலனாயினுங் கேட்க" என்றன ரல்லரோ அந்தத் திருவள்ளுவர்! செல்வத்துட் செல்வம் செவிச் செல்வம் என்பது பொய்யா மொழியே – ஆதலின், அண்ணலே, நின் கல்வி சிறிதென்று குறைகூர்ந்து வருந்தலை......என்ன உருக்கமுடன் இராமனைத் தேற்றப்புகும் கரவிலா இவ்விளவலை அருமையுடன் யாரே அணைத்துக்கொள்ளமாட்டார்!

இதனினும் இலக்குவனை நமக்கு அருமையாக்க வல்லசொல் இப்பாசுரத்தில் வேறொன்றுளது: "கதிரோன் மைந்தனை ஐய கைகளால் விதியின் மௌலி மிலைச்சுவாய்" என்று இராமன்ஏவியதற்குஇணங்க, இலக்குவன் தன் கைகளாலேயே முடிசூட்டிச் சுக்கிரீவனை அரசனாக்கி யிருக்கின்றான். ஆயினும், 'சுக்கிரீவன் சேனை' என்னாது 'வாலி சேனை' என்னுமிது, இலக்குவனது உள்ளுணர்வின் ஆழத்தினின்று வருகின்ற சொற்களாம். உடலைத் துறந்து வாலி உம்பர் நாடடைந்தானாயினும், இலக்குவன், இன்னமும் சுக்கிரீவனை இக் கிட்கிந்தைக்கு அரசனெனக் கருதும் வகை கற்றிலன். வாலியின் தலைமையே இவன் நினைவத்தனையுந் தழுவிக்கொண்டிருக்கின்றது. எதுகைக்காகவன்றி அவ்வாலியின் வருகைக்கு இங்கு வேறு குறிப்பிலதென்று எண்ணலாகாது. மோனையும் எதுகையும் செலுத்தும்வழி செல்லவேண்டியவர் ஏனைய புலவர்கள் ஆகலாம். 'வாலி' என்பது இங்கு எதுகைச் சொல்லாய் நிற்றலே கம்பரின் கருத்து இன்னதாம் என்ன வற்புறுத்துகின்றது.

சீதையைத் தேடுவதற்கு அவ்வாலியின் சேனையை இச்சுக்கிரீவன் இன்னுங் கொணர்ந்திலன் என்பதை உன்னி இராகவன் சங்கை கொண்டனனாயின், அச்சங்கையும் ஆதாரமற்றதன்று. "மாற்றானெனத் தம்முனைக் கொல்லிய வந்துநின்றான், வேற்றார்கள் திறத்தில் இவன்தஞ்சம் என்னும்" என்று தான் முன்னருரைத்தது இப்பொழுது மெய்யேயாயிற்றெனினும், அதுபற்றி இராமன் கவலல் வேண்டாவென, அவனது தனிப்பே ராற்றலிற்குத் துணையொன்றும் அவசிய மில்லாமையை நினைவுபடுத்துவானாகி,

மறைது ளங்கினு மதிது ளங்கினும்
வானு மாழ்கடல் வையமுந்
நிறைது ளங்கினு நிலைது ளங்குறு
நிலைமை நின்வயி னிற்குமோ
பிறைது ளங்குவ வனைய பேரெயி
றுடைய பேதையர் பெருமைநின்
இறைது ளங்குறு புருவ மென்சிலை
யிடைது ளங்குற விசையுமோ

[வேதங்கள் பிறழ்ந்தாலும், சந்திரன் நிலைதவறினாலும், வானமும் ஆழ்ந்த கடலும் பூமியும் நிலைதவறினாலும், உன் நிலைமை கலங்குகிற தன்மை உன்னிடத்தில் உண்டாகக் கூடுமோ! பிறைகள் விளங்குவனபோன்ற பெரியபற்களையுடைய மூடர்களாகிய அரக்கர்களின் பெருமையானது, நின் மேன்மை விளங்குகின்ற புருவமாகிய வில்லானது நடுவிடம் அசையுமானால், எதிர் நிற்குமோ]

என்னத் தேற்றிப் பின்னும்,

அனும னென்பவ னளவ றிந்தன
மறிஞ வங்கத னாதியோர்
எனைய ரென்பதோ ரிறுதி கண்டில
மெழுப தென்றெணு மியல்பினார்
வினையின் வெந்துயர் விரவு திங்களும்
விரைவு சென்றன வெளிதினின்

தனுவெ னுந்திரு நுதலி வந்தனள்
சரதம் வன்றுயர் தவிர்தியே

[அறிஞனே, எழுபது வெள்ளமென்று எண்ணிச்சொல்லப்படுகின்ற அங்கதன் முதலாயினோர்தம் தன்மைகளை நாம் இன்னும் அளந்து அறியவில்லையாயினும், அனுமன் என்பவனது மேன்மையின் அளவை நாம்அறிந்திருக்கின்றோம்—(ஆதலின் அவனை நம்பலாம்). நம்முடைய தீவினை போலக் கொடிய துன்பம் பொருந்திய இம்மாரிக்காலத்து மாதங்களும் விரைவிற் கழிகின்றன. உன் கை வில்லெனத்தகைய அழகிய நெற்றியையுடைய சீதையும் சுலபமாக வந்து சேர்ந்தவளாவாள், இது நிச்சயம். ஆகையால், வலிய உன் துயரத்தை அகற்றுவாயாக]

என்று, குரக்கினத் துணை தமக்கு வாய்க்காதென்ன முற்றிலும் கையறவேண்டா வென்றுஞ் சாற்றுகின்றான்.

எது எவ்வாறாயினும், இவ்விடர்களைத் தாங்கத்தான் வேண்டுமென்பதற்கு வேறோர் காரணமும் உளதென்பதை,

மறைய றிந்தவர் வரவு கண்டுமை
வலியும் வஞ்சகர் வழியொடும்
குறைய வென்றிடர் களைவெ னென்றனை
குறைமு டிந்தது விதியினால்
இறைவ வங்கவ ரிறுதி கண்டினி
திசைபு னைந்திமை யவர்கடா
முறையு மும்பரு முதவி நின்றரு
ளுணர்வ ழிந்திட லுறுதியோ

[தலைவனே, முன், வேதங்களை யறிந்த தண்டகாரணிய முனிவர்கள் வந்து சரணடைந்ததைக் கண்டு, 'உங்களை வருத்துகின்ற வஞ்சனையுடைய அரக்கர்களை அவர் குலத்தோடுந் தொலைத்து, உங்கள் வருத்தங்களை நீக்குவேன்' என்று வாக்களித்துளாய். விதி வசத்தினால், அவ்வாக்கை நிறைவேற்றாத குறை முடிகின்றகாலம் நெருங்கிவிட்டது. ஆகையால் அவ்வரக்கர்களை இனித்தொலைத்து, இனிமையாகக் கீர்த்தியைச்சூடி, தேவர்களுக்கும் அவர் வசிக்கும் தேவலோகத்தைக் கொடுத்தருள். இதனைவிட்டு உணர்வழிந்து ஒடுங்குவது நல்லதோ.]

என்ன வற்புறுத்தி, இறுதியாக,

காது கொற்றநி னக்க லாதுபி
றர்க்கெவ் வாறுக லக்குமோ
வேத னைக்கிட மாதல் வீரதை
யன்று பேதைமை யாமரோ
போது பிற்பட லுண்டி தோர்பொரு
ளன்றி யின்றுபு ணர்த்தியேல்
யாது னக்கிய லாத தெந்தைவ
ருந்த லென்னவி யம்பினான்

[என் ஐயனே, பகைவரை அழிக்கின்ற வெற்றி, உனக்கல்லாமல் மற்றவர்களை எவ்வாறு சேரும். போர்மேற் செல்பவர் காலத்தைக்கருதிக்காத்திருக்க வேண்டுமென்ற பொருளுரையும் இருக்கின்றது. ஆயினும், இப்பொழுதே இதை முடித்துவிடுவதென்று நீ முனைந்தாலும், உன்னால் இயலாதது எதுதான் இருக்கின்றது. வீணாக வருந்தாதே, என்று இலக்குவன் கூறினான்.]

இராமனது நிலையில் இருப்பவர்களுக்கு இவையனைய சிலசொற்கள் எத்துணை ஆறுதல் அளிக்குமோ அத்துணை ஆறுதல் இலக்குவனது சொற்கள் அளித்தன.


# கலா நிலயம்

## முன்னைய வால்யூம்கள் இன்னும் சிலவே இருக்கின்றன உடனே பெற்றுக்கொள்வது நலம்.

**1928, 1930, 1931, 1932, 1933, 1934** வருடத்தியவை கிடைக்கும்.

| | | | |
|---|---|---|---|
| பைண்ட் செய்யாதவை—ஒவ்வொரு வால்யூமின் விலை ரூ. | 7 | 8 | 0 |
| ஆப்லெதர் கில்ட் பைண்ட் ,, | 9 | 0 | 0 |
| ஒரு வால்யூமை இரண்டு பாகமாகப் பிரித்துப் பைண்ட் செய்தது | 10 | 0 | 0 |

இந்தியாவிற்குள் இருப்பவர், இரயில்வே பார்சல் மூலமாகப் பெற்றுக்கொள்ளலாம். பர்மா, ஸிலோன், மலேயா முதலிய இடங்களுக்குத் தபால் மூலமாகத் தான் அனுப்ப இயலும். இந்தியா பர்மா ஸிலோனில் உள்ள இடங்களுக்கு வால்யூம் ஒன்றிற்கு ரூ. 2-ம், மலேயா, தென்னாப்பிரிக்கா முதலிய வெளிநாடுகளுக்கு ரூ. 3-ம், தபால் பார்ஸல் சார்ஜ் ஆகும்.

இந்தியாவில் உள்ளவர் வேண்டிய வால்யூமின் விலையை அனுப்பித் தம்மூருக்கு அடுத்திருக்கும் இரயில் ஸ்டேஷனைத் தெரிவிக்கவும். அல்லது தபால் பார்ஸலில் பெற்றுக்கொள்ள விரும்பினால், அந்தக் கட்டணத்தையும் சேர்த்து அனுப்பவும்.

வெளி நாடுகளில் உள்ளவர் வேண்டிய வால்யூம்களின் விலையையும் தபால் கட்டணத்தையும் சேர்த்து அனுப்புதல் வேண்டும். இவைகளை வி. பி. யில் அனுப்ப இயல்வதில்லை.



பல போலிகள் இருப்பதால் நம் பிக்கையடைய நேரில் எழுதுக.

ஜிஞ்சீப்

அஜீர்ண பித்த சமனம்

ரூ. ஒன்று அனுப்பி 12 பாக்கெட்கள் நஞ்சன்கூடு பல்பொடி வீட்டில் பெறுக.



நஞ்சன்கூடு பல்பொடி

சோல் ஏஜண்டுகள்:- யுனைடெட் கன்ஸர்ன், பந்தர் தெரு, மதராஸ்.

KALANILAYAM
REG. NO. M. 2324.

## வர்த்தமானம்.

தத்துவாயர் சங்கம்:—அமரிக்காவில் வசித்த ஒரு தத்துவாயர், அதனால் தாம் பேசமாட்டாமல் இடையூறுபட்டு வருந்திய வருத்தமும் அவமானமுந் தாங்க மாட்டாமல், தற்கொலை புரிந்துவிட்டார். அவருக்கு அனுதாபங் காட்டச் சில நாட்களுக்கு முன் நூறு தத்துவாயர்கள் ஒன்றாகக் கூடி அவர் ஞாபகார்த்தமாக ஒரு சங்கம் நிறுவி யிருக்கின்றார். அச் சங்கத்தைச் சேர்ந்தவர்கள், இனி தைரியமாக வாய் விட்டுப் பேசிப் பேசித் தம் தத்துவாய் அவத்தையை ஒழித்துக்கொண்டுவிடுவதென்னத் தீர்மானம் செய்திருக்கின்றனர்.

* * *

அன்பு செய்தல்:—பிரான்சு தேசத்தில் 'அன்பு வாரம்' என்று ஒரு வாரம் கொண்டாடுகின்றார்கள். அப்பொழுது மக்கள் தங்களைவிட ஏழைகளாய் இருப்பவர்களைப் பற்றிச் சிந்திக்க வேண்டுமாம். இதற்காகப் பெரும்பொருள் திரட்டப்படுகின்றது. அந்த வாரத்தில் எல்லோரும் ஒருவரொக் கொருவர் அன்பு காட்ட வேண்டுமாம்.

* * *

எட்கார் வால்லெஸ் என்ற ஆங்கில நாவலாசிரியர் இறந்துபோது இருந்த கடன் (எண்பத் தோராயிரம் பவுன்) அத்தனையும் அவர் புத்தகங்களின் 'இராயல்டி' யைக்கொண்டே இரண்டு வருடங்களுக்குள் அடைத்துவிட்டார்களாம்.

இண்டோ-கம்மர்ஷியல்
பாங்க், லிமிடெட்.
மாயவரம்
சென்னை ஆபீஸ், 107. அரண்மனைக்காரத் தெரு,
பஜார் பிராஞ்சு, 260. சைனாபஜார் ரோட்,
மதுரை, காரைக்குடி, விருதுநகர்,
கும்பகோணம், திருவாரூர்,
ஈரோடு, தூத்துக்குடி,
விஜயநகரம்,
புதுக்கோட்டை,
திருநெல்வேலி.
சப்-ஆபீஸ்
சீர்காழி & சிதம்பரம்
எல்லா வகையான பாங்கி அலுவல்களும் ஏற்றுக்கொள்ளப்படும். நிபந்தனைகள் எழுதித் தெரிந்துகொள்ளலாம்.
S. N. N. சங்கரலிங்க அய்யர்,
மானேஜிங் டைரக்டர்,
107. அரண்மனைக்கார தெரு, ஜி, டி. மதறாஸ்.

NATIONAL
INSURANCE COMPANY, LIMITED.
Head Office:
NATIONAL INSURANCE BUILDING,
362, China Bazar Rd, Esplanade, Madras.
1933 Results.
New Business Completed exceeds ... ... Rs. 1,67,00,000
The Company with a steady progress all round.
All forms of life assurance policies issued at low safe rates of premium.
Specialities.
Female Lives
Joint Lives
Permanent Protection Policies
Triple Benefit Policies.
Marriage & Future Provision Policies.
For agencies please apply to:—
Branch Secretary, 362, China Bazar Road, Esplanade, Madras. OR R. G. DAS & Co., *Managers.*
Consult
NATIONAL FIRE
AND
GENERAL INSURANCE COMPANY Ltd.,
Head Office:—
NATIONAL INSURANCE BUILDING,
362, China Bazar Rd, Esplanade, Madras.
for Fire, Motor & Accident policies.
A sound Company.
Please apply for particulars to:—
Branch Secretary, 362, China Bazar Road, Esplanade, Madras. OR R. G. DAS & Co., *Managers.*

சிறந்த பலவிருத்தி ஔஷதம்
சென்ற 53 வருஷங்களாகப் பேரும் புகழும் பெற்று உலாவி வருகின்றன.
ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்
மலச்சிக்கல், தேகஅசதி நரம்புகளின் தளர்ச்சி, ஞாபகக் குறைவு முதலிய வியாதிகளைக் கரஸ்தமாகக் கண்டிக்கும்.
32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு விலை ரூ. 1
இனும்! "காம சாஸ்திரம்" இனும்!!
ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26 பிராட்வே, மதராஸ்.

யுனைடெட் இந்தியா
லைப் அஷ்யுரன்ஸ் கம்பெனி, லிமிடெட், சென்னை.
ஹெட் ஆபீஸ்:—சென்னை. 1906ல் ஸ்தாபித்தது.
யுனைடெட் இந்தியாவில், லைப் இன்ஷுயரன்ஸின் சிறந்த பயன்கள் குறைந்தசெலவில் கிடைக்கும்.
யுனைடெட் இந்தியாவில் பாலிஸி எடுத்துக்கொள்வது மிகச்சிறந்த இன்வெஸ்ட்மெண்டும், வயது காலத்திற்கும் குடும்பத்திற்கும் இணையற்ற ஆதரவும் ஆகும்.
யுனைடெட் இந்தியாவே, தென்னிந்தியாவில் மற்றெல்லாக் கம்பெனிகளுக்கும் முன்னால் ஸ்தாபித்தது.
யுனைடெட் இந்தியா முற்றிலும் பத்திரமானதும் கெட்டிதிட்டமுடையதும் ஆன கம்பனி.
ஹெட் ஆபீஸ்:— சேம்புதாஸ் தெரு, சென்னை. அல்லது இந்தியா, பர்மா, ஸிலோனில் உள்ள பிராஞ்சுகள்
இவைகளுக்கு எழுதி முழு விவரமும் இது பற்றிய பிரசுரங்களும் பெற்றுக்கொள்ளலாம்.

Printed at the B. N. Press, Mount Road, and Published by Mr. E. Kumariah, B.A., B.L., (Editor)